NOT FOR SALE


ஓ/L 87 DAY CLASS
Mon. Fri. 7-30 -- 8-30
பௌதிகம்
திரு. இ. சத்தியசீலன்
★ ஒளியியல் ✦
(துரித மீட்டல் வகுப்பு)
ஆரம்பமாகிவிட்டது
New Master
INSTITUTE
B.M.C. Lane JAFFNA



# சஞ்சீவி

விலை ரூ 2/-


89 A/L
பிரிவு: II
விலங்கியல் - நாகநாதன்
தாவரவியல் - குமாரன்
பௌதிகவியல் - வர்ணம்
இரசாயனவியல் - தில்லைநாதன்
தூய - பிரயோக கணிதம் - திரு நல்லையா
New Master
INSTITUTE
B. M. C. Lane, JAFFNA


அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

மலர்:2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ சித்திரை மீ 12 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 25 (25-04-1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY இதழ்:14



நேற்று யாழ் நகர் மீது நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலின்போது உடல் சிதைந்த நிலையில் மரணமான நால்வரில் மூன்று பேரின் சடலங்கள்.

கருத்துக் கலசம்
மயூரா

## தர்மம்

தர்மம் நல்காக்கும் என்பார்கள். தர்மங்கள் பலவகை. மனு தர்மம், மத தர்மம் போன்ற யுத்த தர்மமும் ஒரு வகையாகும்.

யுத்தம் என்பது ஆயுதபாணிகள் இருவர் மோதிக் கொள்வதைக் குறிக்கும்.

பொதுவாக இரு நாடுகளின் படைகள் போரிடுவதையே யுத்தம் என்கிறோம்.

யுத்தம் செய்பவர்கள் எதிரிகளாகவே இருப்பினும் போரிடுவதில் சில அறநெறிகள், ஒழுங்கு முறைகள், விதிகள் உள்ளன.

எதிர்த் தரப்புப் படையைச் சேர்ந்த வீரன் ஒருவன் நிராயுதபாணியாகிவிட்டால் அவன் மீது தாக்குதல் நடத்துதல் யுத்த தர்மம் அல்ல.

போரிலும் வல்லமை அற்றுப் போய்விட்டால் தக் கூறித் தஞ்சம் அடையும் எதிரிப்படை வீரனுக்கு உடற்சேதம் செய்யாமல் அவனைக் காப்பது யுத்த தர்மத்தின் ஒரு விதி.

எதிரி நாட்டுப் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துவது யுத்த தர்மம் அல்ல. எதிரி நாட்டின் பொதுமக்கள் புகலிடம் தேடும் இடங்கள், மற்றும் ஆலயங்கள், பிணிதீர் மனைகள், குடிமக்கள் மனைகள், பாடசாலைகள் என்பன மீது தாக்குதல் நடத்துவதும் யுத்த தர்மம் ஆகாது.

யுத்த தர்மத்தை மீறும் அரசன் கொடுங்கோல் மன்னனாகக் கருதப்படுவான்.

இன்று எமது பிரதேசங்களில் யுத்த தர்மம் துளியளவு பேணப்படவில்லை. நிராயுதபாணிகளான பொதுமக்கள் கொல்லப்படுகின்றார்கள். நாட்டின் மக்களை அரசே கொன்று குவிக்கின்றது. அவர்களின் மனைகள் குண்டு வீசி அழிக்கப்படுகின்றன. ஆலயங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

யுத்த தர்மம் மட்டுமன்றி மனு தர்மமும் மீறப்படுகின்றது. கொடுங்கோன்மை ஆட்சி நீண்டகாலம் நிலைப்பதில்லை. "கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல் கோடிச் சூழாது செய்யும் அரசு"

இதனை உணராத தலைவன் இறுதியில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நேற்றும் நகரில் பொம்மர்கள் மனிதவேட்டை

## 4 பெண்கள் உடல் சிதறிப் பலி
## ஏழு வீடுகள் தரை மட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

குடாநாடு மீதான பொம்மர் தாக்குதல் அக்கிரமத்தை ஸ்ரீ லங்கா அரச படைகள் நேற்றும் மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடத்தின.

நேற்றுக் காலை யாழ் நகர் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் நான்கு பெண்கள் உடல் சிதறிப் பலியானார்கள், எட்டுப் பேர் படுகாயமுற்றனர். ஏழு வீடுகள் முற்றாகச் சேதமுற்றன.

ஐந்து பொம்மர் விமானங்களும் ஹெலிக்கொப்டர் ஒன்றும் யாழ் நகரில் நேற்றுக் காலை பத்தரை மணியளவில் அட்டூழியம் புரிந்தன.

நேற்றுக் காலை 10-30 மணி முதல் 11 மணி வரை நகரை வட்டமிட்ட பொம்மர்கள் மார்ட்டின் வீதி, ஐந்தாம் குறுக்குத் தெரு ஆகிய பகுதிகள் மீது அடுத்தடுத்து குண்டு மழை பொழிந்தன.

இந்தத் தாக்குதலில் ஜோசப் நவின் ரூபா (18 வயது), திருமதி பட்ரிக் (81 வயது), திருமதி மாணிக்கம் சாரம்மா (57 வயது), திருமதி திரேசம்மா (84 வயது) ஆகியோர் கொல்லப்பட்டனர். பொம்மர் குண்டுகளினால் இவர்களது உடல்கள் சின்னாபின்னமாகிச் சிதறின.

நேற்றைய தாக்குதலில் 8 பேர் காயமடைந்தனர்.

7 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. அவற்றில் சில முற்றாகத் தகர்ந்து தரைமட்டமாகின.

நேற்றைய தாக்குதலில் பல வீடுகளில் இருந்த ரி. வி., டெக், ரேடியோ, மோட்டார் சைக்கிள்கள், கார்கள் உட்பட பெறுமதியான பல பொருள்கள் நாச

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளை, அளவெட்டியிலும் நேற்று பொம்மர் தாக்குதல்

பலாலி, ஏப். 25

தெல்லிப்பளை, அளவெட்டிப் பகுதிகளிலும் நேற்று பொம்மர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று நண்பகல் 12 மணியளவில் தெல்லிப்பளை முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு அண்மையில் நான்கு பொம்மர்களும் ஒரு ஹெலிக்கொப்டரும் தாக்கியதில் ஆறு வீடுகள் முற்றாகச் சேதமுற்றன.

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையும் சேதமடைந்தது.

அளவெட்டி கோவில் கரையில் நேற்று நண்பகல் நடந்த பொம்மர் தாக்குதலில் வைரவர் கோவில் ஒன்றும் நான்கு வீடுகளும் சேதமுற்றன. பலர் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

(உ-119-20)

## ஈழத் தமிழர் மீது தாக்குதல்:
# ராஜீவிடம் எம்.ஜி.ஆர் கவலை

### நேற்று அவசர சந்திப்பு

புதுடில்லி, ஏப். 25

தமிழர் மீது நடத்தப்படும் விமானத் தாக்குதல்கள் குறித்து தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் தனது ஆழ்ந்த கவலையைப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் நேற்றுத் தெரிவித்துக் கொண்டார்.

நேற்றுப் பிற்பகல் பிரதமர் காந்தியை திரு. இராமச்சந்திரன் அவசரமாகச் சந்தித்துப் பேசினார்.

வெளியுறவு அமைச்சர் என்.டி. திவாரியும் இச் சந்திப்பில் பங்குபற்றினார்.

45 நிமிடங்கள் இச் சந்திப்பு நீடித்தது.

இலங்கைத் தமிழர் மீது நடத்தப்படும் தாக்குதல்களினால் தமிழகத்தில் எழுந்துள்ள பதற்றம், கவலை ஆகியவை குறித்து முதலமைச்சர் பிரதமரிடம் தெரிவித்தார்.

முதலமைச்சருடன் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் சென்று இருந்தார்.

பிரதமர் காந்தியின் அவசர அழைப்பை ஏற்று முதலமைச்சர் வியாழன் இரவு புதுடில்லி சென்றார்.

இதற்கு முன்னர் அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழு, திரு. குழந்தைவேலு தலைமையில் முதல்வரைச் சந்தித்தது.

இலங்கைத் தமிழர் மீது நடத்தப்படும் விமானத் தாக்குதல்களை நிறுத்தி தமிழரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசை வற்புறுத்தும்படி இக்குழு முதல்வரைக் கேட்டுக் கொண்டது.

முதலமைச்சர் புதுடில்லியில் நேற்றுக் காலை உப ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனையும் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினார்.

(உ-ஏ)


சுபநேரம்
25-04-1987
சனிக்கிழமை
சுபநேரம்:-
8-00 முதல் 4-30 வரை
ராகுகாலம்:-
9-00 முதல் 10-30 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சனிப்பிரதோஷ விரதம்


### தமிழரைக் காப்பாற்ற கோரிக்கை

சென்னை, ஏப் 25

இலங்கைத் தமிழரை விமானத் தாக்குதலில் இருந்து காப்பாற்றும் படி தி.மு.க. தலைவர் கருணாநிதி இந்திய அரசை கேட்டுக் கொண்டிருக்கிறார்.

தமிழரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு இந்திய பிரதமருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

(உ-ஏ)

### முதலமைச்சருடன் மீண்டும் பேச்சுக்கு முயற்சி

புதுடில்லி, ஏப். 25

மீண்டும் பேச்சுக்கள் நடத்தும் சாத்தியம் இருக்கின்றதா என்பதை அறிந்துகொள்ளற்கு இந்தியா ஈடுபட்டுள்ளது.

இலங்கை அரசுடனும் தமிழ்ப் போராளி அமைப்புக்களுடனும் இதுபற்றி இந்தியா தொடர்பு கொண்டிருப்பதாக இந்திய நாடாளுமன்றத்தில் வெளியுறவு இணை அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்றுத் தெரிவித்தார்.

(உ-ஏ)

### படுகொலைகளின் பின்னால் இஸ்ரவேல்!

#### சு. க. எம். பி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப் 25

கந்தளாய், கொழும்புப் படுகொலைகளின் பின்னணியில் இஸ்ரவேலின் கரம் உண்டு.

இன்னும் சில குண்டுகள் வெடித்தால் தேர்தலே வேண்டாம் என்று அரசாங்கம் கூறிவிடும்.

இப்படிச் சொன்னார் மஹதேகம எம். பி. திரு. அமரசிறி தொடங்கொட. இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்.

நாடாளுமன்ற விவாதத்தில் பங்கு பற்றிப் பேசுகையில்--

அரசு இராஜினாமாச் செய்யவேண்டும். தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

(உ-ஏ)

### கொழும்பில் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 25

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் நேற்று ஊரடங்குச் சட்டம் இரவு எட்டு மணி தொடக்கம் அமுலுக்கு வந்தது.

இன்று சனி காலை 6 மணி வரை அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

(உ-ஏ)

### யாழ்தேவி சேவையில்

கொழும்பு, ஏப் 25

கொழும்பு மருதானைக்கும் வவுனியாவுக்கும் இடையிலான யாழ்தேவி ரயில் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

(உ)

## நாடாளுமன்றத்தில் நேற்றுபெருங்குழப்பம்

### எதிரணி எம்.பிக்கள் வெளியேற்றம்

கொழும்பு, ஏப். 25

சந்தளாய் படுகொலை, கொழும்பு குண்டுவெடிப்புச் சம்பவம் ஆகியவற்றின் பின்னால் 'இஸ்ரவேலின் கரம்' உள்ளதாக சுதந்திரக் கட்சி வெளியிட்ட குற்றச்சாட்டு நேற்று நாடாளுமன்றத்தில் பெருத்த குழப்பத்தை ஏற்படுத்தியது.

கூச்சலும் குழப்பமும் நிலவியதால் நாடாளுமன்றம் பல தடவை ஒத்திவைக்கப்பட வேண்டியதாயிற்று.

இதைத் தொடர்ந்து ஐந்து எதிர்க்கட்சி எம்.பிக்களை சபையில் இருந்து வெளியேறும்படி சபாநாயகர் உத்தரவிட்டார்.

அந்த எம்.பிக்கள் வெளியேற மறுத்தனர். பின்னர் சபைக் காவலர்களினால் அவர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மஹதேகம எம். பி. அமரசிறி தொடங்கொட, அக்மீமன எம். பி றிச்சர்ட் பதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### படைகள் தயார் நிலையில்

கொழும்பு, ஏப். 25

பாதுகாப்புப் படைகள் எதற்கும் தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளன

- இப்படி அரசு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விமானத்தாக்குதல் நடத்தப்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-ஏ)

### அவசரகாலச் சட்டம் நீடிப்பு

கொழும்பு, ஏப் 25

நாடாளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்டநீடிப்புப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

110 எம்.பிக்கள் ஆதரவாக வாக்களித்தனர். கலவான எம். பி திரு. ஆர். குணசேகரா மட்டும் எதிர்த்து வாக்களித்தார்.

(உ-ஏ)

#### புலிகள், ஈரோஸ் போராளிகளின்
## முகாம்கள் முற்றாக அழிக்கப்படும்வரை விமானத் தாக்குதல்கள் தொடருமாம்

கொழும்பு, ஏப். 25

யாழ் குடா நாட்டில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ் இயக்கங்களின் முகாம்கள் முற்றாக அழிக்கப்படும் வரை விமானத் தாக்குதல் தொடரும்.

இது இறுதி இராணுவ நடவடிக்கையல்ல; தரை மார்க்கமாக யாழ் குடா நாட்டைக் கைப்பற்றும் எண்ணமும் தற்போது அரசுக்கு இல்லை.

- இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்றுத் தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி அதில் இப்பிரகடனத்தை அவர் வெளியிட்டார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் பலரும் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அமைச்சர் அத்துலத் முதலி மேலும் சொன்னதாவது:

இன்றும் (வெள்ளி) யாழ் குடா நாட்டில் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது.

தீவிரவாதிகளுக்கு வெளியில் இருந்து ஆயுதங்கள் கிடைக்கின்றன

இராணுவ ரீதியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையில் அரசு இன்னும் ஈடுபடவில்லை.

பொதுமக்களைக் கொல்வதை நிறுத்தி, பேச்சுக்களுக்குத் தயாராகத் தீவிரவாதிகள் வரும் பட்சத்தில் இலங்கை அரசு தனது போக்கை மாற்றுவது பற்றி பரிசீலிக்கும்.

- இப்படி அவர்சொன்னார்.


(உ-ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

## ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

### ஈசாப் நீதிக்கதை




## நிலா நிலா வா வா

நிலா நிலா வா வா
நீ இங்கே ஓடி வா
உனை வந்து வானிலே
வைத்து எங்கே போகிறாய்?

வெள்ளி ஓடம் போலவே
வேகமாகப் போகிறாய்
அள்ளி நிலா வீசியே
ஆனந்தமே தருகிறாய்!

வட்டமான வெண்ணிலா
வளைய வரும் தண் நிலா
கிட்ட வந்து நீயுமே
கட்டி முத்தம் தாராயோ!

உள்ளம் உவகை பொங்கவே
உலகம் உன்னை வாழ்த்துமே
கள்ளம் நீங்கி நாங்களும்
களிப்புடனே வாழ்வமே!

—ஸ்ரீதரன்—

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

## நொடிகள் அவிழுங்கள் பார்க்கலாம்

1 'தொப்' என்ற விழுந்தான் தொப்பி கழன்றான். அது என்ன?

2. வட்ட வட்டச் செப்புக்குள்ளே இட்ட தெல்லாம் பாம்புக்குட்டி. அது என்ன?

3. நன்னுவான் தின்ன மாட்டான். அது என்ன?

4 மஞ்சள் நிற மண்டபத்துக்குள்ளே பவள நிறக் கன்னியர் பலர். அது என்ன?

5 ஓட்டைவீடு-அதற்கு ஒன்பது வாசல். அது என்ன?

6. சின்னக்காவுக்கும் பெரியக்காவுக்கும் பன்னிரண்டு பேர் காவல். அது என்ன?

விடை

1. பனம்பழம்
2. இடியப்பம்,
3. பாக்குவெட்டி
4. மாதுளம் பழம்
5. மனித உடல்
6. மணிக்கூடு

இ—உமா

# போராட்டக் களத்தில் தலைவனும் தொண்டனும்

தமிழகத்தில் கி. பி. ஆறும் ஏழாம் நூற்றாண்டுகளில் உருவான சைவபக்தியியக்கம் தமிழகம் கண்ட முதலாவது மக்களியக்கம். அவ்வியக்கத்தை முன்னின்று வழி நடத்தியவர்களே சைவ நாயன்மார். அவர்களுள் முதன்மைத் தகுதி பெற்றோர் என்ற வகையில் அப்பர் சம்பந்தர் ஆகியோர் முக்கிய கவனத்திற்கு உரியவர்கள். முதலாமவர் "நாமார்க்கும் குடியல்லோம்" என்று அதிகார மறுப்புக் குரல் எழுப்பியவர் மற்றவர் "ஆணை நமதே" என அதிகார முழக்கம் செய்தவர்

பக்தி இயக்கத்தை வழிநடத்தும் வகையில் இருவரும் சில பொது அணுகு முறைகளைக் கையாண்டவர்கள். சமண பௌத்தருக்கு எதிராக வரும் இறை பக்தியைப் புலப்படுத்தி நின்ற உளப் பாங்கிற்கும் இயக்கத்திற் பங்கு கொண்ட நிலைக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள. அப்பர் இறைவனை அணுகும் நிலையில் அழுகைச் சுவையே விஞ்சிநிற்பது இறையருள் கிட்டுமா என்ற ஏக்கமே அதில் தொனிக்கும். ஆனால் சம்பந்தரோ உரிமை உணர்வுடனும் அழகு ரசனையுடனும் இறைவனை அணுகியவர் அப்பர் ஒரு தொண்டர் என்ற நிலையிலேயே இயக்கத்திற் பங்கு கொண்டார் அவர் கையில் இருக்கும் உழவாரம் தொண்டின் சின்னமாகும். ஆனால் சம்பந்தரோ தலைமைத் தகுதியுடையவராகவே - தானைத்தளபதியாகவே - இயக்கத்திற் பங்கு பற்றியவர். பாடிப் பரவு

இவ்வாறு இவ்விருவரும் இருவேறு அணுகு முறைகளையும் அநுபவங்களையும் உடையவர்களானமைக்கு அடிப்படைக் காரணம் இயக்க வரலாற்றின் இருவேறு கால கட்ட நிலைகளை அவர்கள் சார்ந்து நின்றமையேயாம். சம்பந்தருக்குச் சமகாலத்திலும் வாழ்ந்தவரான அப்பர் சம்பந்தரைவிட ஐம்பது வயதுக்கு மேற்பட்ட முதியவர் அப்பர் பிறந்த இருந்திருக்க முடியாது என்பது வெளிப்படை. எனவே தமது தொண்டின் மூலமே மக்களது உள்ளங்களை அவர் கவரவேண்டியவரானார் மேலும் இளமையிற் சமணத்தைச் சார்ந்திருந்தமையால் சைவ மக்கள் மத்தியில் தனது கருத்துக்கு அங்கீகாரம் கிடைக்குமா என்ற தாழ்வுணர்வும் அப்பருக்கு இருந்திருக்கலாம் என்பது அறிஞர் ஊகம்.

கலாநிதி. நா. சுப்பிரமணியன்

### சம்பந்தரும் அப்பரும் இருநிலை நின்று நடத்தினர்

காலம் கி. பி 575 என கணிக்கப்படுகிறது. இவர் இளமையிற் சமணம் சார்ந்து பின் சைவத்திற்கு மீண்டகாலம் கி பி 615 ஆகலாம் என்று கருதமுடிகிறது அக்காலப்பகுதியில் சமண அதிகாரவர்க்கத்தை எதிர்த்து அவர் போராடத் துணிந்த வேளை பக்தியியக்கம் உரிய வகையில் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. சமுதாயத்தில் ...

அப்பர் சைவராகமாறி ஏறத்தாழ இருபதைத் தாண்டுகட்குப் பின்னர் பிறந்தவர் சம்பந்தர். இடைக்காலத்தில் சைவ பக்தியியக்கம் நன்கு வேர்விட்டு வளர்ந்திருந்தது எனவே தொண்டு செய்து இயக்கத்தைப் பரப்ப வேண்டிய தேவை இருக்கவில்லை. மேலும் தன்னம்பிக்கையும் துணிவுமுள்ள ஒரு வழி நடத்துவோனை-தலைவனை இயக்கம் நாடி நின்ற ...

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சாமத்தியச் சடங்கு வீட்டில் குழப்பம் விளைவித்தவருக்கு இரவில் சூடு!

### நீதிமன்றத்துக்கு வந்த உண்மைச் சம்பவம்

வில்வம் பசுபதி

... பொலிஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியமளிக்கையில் சம்பவம் நடைபெற்ற உடன் எதிரியைத் தேடியதாகவும், அவர் அம்பாறைக்குப் போய்விட்டதாக அந்த ... ராகப் பல வழக்குகள் இருந்தன. துவக்கு வெடிச் சத்தம் கேட்டவுடன் அண்ணை தம்பி வைத்தான் தேடிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மரணத்தின் பின் மனிதன் நிலை; ஆவி உலகத் தொடர்பு உண்டா?

கு வைத்திலிங்கம்

... (Communication with Spirits) ... (Medium) ...

## பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

### சிகரெட் உருவான 'சீக்ரெட்' தகவல்

ஆரம்பகாலத்தில் புகையிலைத் தண்டுகளை சுங்கானில் இட்டுப் புகைத்தனர்.

பலர் சுருட்டுப்போல் சுருட்டிப் புகைத்தனர் 1838 ஆம் ஆண்டு துருக்கியருக்கும் எகிப்தியருக்கும் போர் நடைபெற்றது.

எகிப்தியர்களுக்காக போர்முனைக்கு புகையிலை மூட்டையும், சுங்கான்களும் அனுப்பப்பட்டன.

ஆனால் ஒரு வெடிகுண்டு திடீரென வெடித்ததால் புகையிலை எல்லாம் சிறு துண்டுகளாகச் சிதறிவிட்டன.

அந்த தாள்களில் சிறிது எடுத்த கடற்படைவீரன் சுருட்டி முனையைக் கொளுத்தி வைத்தான். முதல் சிகரெட்டும் அன்றே உருவானது.

### புகழ் மூன்றுவகை

முதல் தரமான மனிதர்கள் தங்கள் புகழைக் கூட விரும்புவதில்லை.

இரண்டாம் தரமான மனிதர்கள் தங்கள் புகழை மட்டுமே விரும்புகிறார்கள்,

மூன்றும் தரமான மனிதர்களோ தங்கள் புகழ் என்பது அடுத்தவர் ... மூலமாகவே வரவேண்டும் என்று ... கிறார்கள்.

### எது வாழ்க்கை

* புழுக்கள் கூட மிதிபட மிதிபட புலியாக மாறும்.

* தளதளவென்று இருக்கிற வேப்பமரத்தில் ஒரு குச்சியை ஒடித்துப் பல் துலக்கினால், அந்தக் குச்சி தன் மனக் கசப்பைக் காட்டிக் கொள்கிறது

* வயது, எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு ஒரு மதிப்பை அளிக்கின்றது

* ஒருவன் மற்றவனுக்கு நண்பன் என்றால் விசுவாசமாக இருக்க வேண்டும் விரோதி என்றால் உறுதியாக இருக்க வேண்டும்.

* வாழ்ந்து கொண்... வாழ்க்கை! மூச்சு விட்... அல்ல வாழ்க்கை!

### உலகம் எப்போ அழியும்?!

நம்பினால் நம்புங்கள்

சுக்கிரன் கிரகத்தில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு வெடிப்புத் தோன்றி— அது தொடர்ந்து முடியும் நேரத்தில் — சனிக்கிரகத்துக்கு விஞ்ஞானிகளால் ரொக்கட் ஒன்று ஏவப்படும்

இவை இரண்டும் ஒன்றை ஒன்று சந்திக்கும் நேரத்தில் — பூமியின் பயங்கர விளைவுகள் ஏற்படும் இயற்கை தன் செயலை மாற்றிக் கொள்ளும்

இதுவே பூமியின் அழிவின் ஆரம்பம்

இப்படிச் சொல்வது யார்? எகிப்து நாட்டில் கட்டப்பட்டிருக்கும் பிரமிட்டுக்களின் உள்ளே 3000 ஆண்டுகளுக்கு முன்பே எழுதி வைக்கப்பட்ட ஒரு செய்தி ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் இரண்டு

'இதையெல்லாம் வைத்துக்கொண்டு நீங்களும் கதை எழுதப் போகிறீர்களா? உங்களைக் கும்பிடுகிறேன். அப்படி எதுவும் செய்து விடாதீர்கள். தயவு செய்து இதையெல்லாம் நீங்கள் இரகசியமாக வைத்திருக்க வேணும்... அவருக்கோ அவரது கௌரவத்துக்கோ களங்கம் ஏற்படுவதை என்னால் அனுமதிக்க முடியாது'

அவளின் பதிபக்தியையும், விவேகசந்திரனுக்கு ஏதோ கௌரவம் இருப்பதாக அவள் எண்ணிக் கொண்டிருப்பதையும் நினைத்து வியந்த நான் 'இதையெல்லாம் என்னிடம் வந்து சொல்லிக் கொண்டிருப்பதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டுமே...—' என்றேன்.

'அதைப் பின்னால் சொல்லுகிறேன்' என்றவள் 'தயவுசெய்து என்னுடைய மிகுதிக் கதையையும் கேட்க முடியுமா?' என்று எனது சம்மதத்துக்காகக் காத்திருந்தாள்.

நான் 'சரி' என்றதும் அவள் தொடர்ந்து சொன்னாள்.

'வயிற்றிலே குழந்தை வளர்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை அவரிடம் முதன் முதலாகச் சொன்னதும் அவர் பேயறைந்தவர் போலானார். அப்படி ஒரு நிலைமை வருமென்று நான் எதிர்பார்க்கவில்லை எனக் கவலைப்பட்டார். இரண்டு நாட்கள் கழித்து அவர் ஒரு திட்டத்துடன் வந்தார். அதைக் கேட்டதும் நான் பேயறைந்தவள் போலானேன்.

'உயர்ந்த பண்பாளர்—குழந்தையுள்ளம் கொண்டவர் என்றெல்லாம் நான் நினைத்த இவரா இந்தப் பாவத் திட்டத்தையும் வெளியிடுகிறார் என்று வேதனைப்பட்டேன். அந்தப் பாவச் செயலைச் செய்வதற்கு நான் உடன்பட மறுத்தேன். அதனை எனது மதமும் ஏற்காது மனமும் விரும்பாது என எதிர்த்துப் பேசினேன். அவர் எதையோ பறிகொடுத்தவர் போலானார்.

'இதற்கிடையில் இச்செய்தி எனது தாயாருக்கும் தெரிந்து விட்டது. ஆச்சி என்னை அகப்பட்டதைக் கொண்டு தாக்கு தாக்கென்று தாக்கி விட்டாள். தானும் தலைதலையென்று அடித்துக் கொண்டாள். அவ தனது குடும்பத்துக்கு ஏற்பட்ட களங்கத்தை எண்ணி எண்ணி அழுது கொண்டேயிருந்தாள். இந்த அசிங்கத்தைப் பார்க்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. வெகுவிரைவில் அந்த அவமானமும் அதிர்ச்சியுமே அவளின் உயிரைக் குடித்து விட்டது.

நாளாக நாளாக இந்தச் செய்தி ஊர் முழுவதுமே பரவி விட்டது. எனது சமூகமே என்னை ஒதுக்கி வைத்து விட்டது. என்னில் விழித்தாலே பாவம், என்னோடு பேசினாலே தீட்டு என்ற நிலையில் எனது பலகார வியாபாரமும் படுத்து விட்டது.

அவமானத்தின் எல்லைக்கே தள்ளப்பட்டு விட்ட நான் ஒருநாள் யாருக்கும் தெரியாமல் மண்ணெண்ணெயை உடம்பிலே ஊற்றித் தீ வைத்துத் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்வந்து விட்டேன். இதை எப்படியோ அறிந்து கொண்ட வனிதா ஊரைக்கூட்டி தீ பரவாமல் தடுத்து விட்டாள்.

'அடுத்தமுறை அவர் வந்தபோது இச்செயலுக்காக என்னை மிகவும் கண்டித்துப் பேசினார். இது போன்ற முயற்சிகளில் இனிமேல் ஈடுபடக் கூடாது என என்னிடம் உறுதிமொழியும் பெற்றுக் கொண்டார். என்னையும் எனது குடும்பத்தையும் எந்த நிலையிலும் எந்த விதத்திலும் காப்பாற்றுவது தனது கடமை என்று வாக்குறுதியும் தந்தார். அப்படியே எங்கள் தேவைகளை அறிந்து தாமாகவே அவ்வப்போது உதவிகளும் செய்து வந்தார்.

பிரசவத்துக்கான நாளும் நெருங்கி வந்தது. அவர் அவசரமாக ஓடி வந்தார். தன்னால் பிரசவத்தின்போது நிற்க முடியாதிருப்பதாகச் சொல்லி, அதற்குத் தேவையான பணத்தையும் தந்துவிட்டு என்னை மன்றாடும் பாவனையில் நின்றார். பின்னர் மெதுவாகச் சொன்னார். ஆஸ்பத்திரியில் பிள்ளைப் பதிவுக்காகப் பெயர் கேட்கும்போது, ஆறு வருடங்களுக்கு முன் ஓடிப்போன வனிதாவின் தகப்பன் பெயரையே கொடுக்கும்படி சொன்னார். குழந்தைக்குப் பெயர் வைக்கும்போதும் எனக்கு விருப்பமான எங்கள் மதப் பெயராகவே சூட்டும்படியும், அதுவே தனது விருப்பமும் என்றும் சொன்னார். இவைகளைச் சொல்லும்போது ஒரு கட்டத்தில் அவர் எனது காலில் விழுந்து கூட மன்றாடினார்'

கதையைச் சொல்லி முடித்துவிட்ட திரேசா நடந்துவிட்ட தவறுகளை எல்லாம் நினைத்து வருந்துவதுபோல வெட்ட வெளியை வெறித்துப் பார்த்தவாறிருந்தாள்.

நான் மீண்டும் அவளிடம் அந்தக் கேள்வியைக் கேட்டேன்.

'இப்பொழுதாவது சொல்வீர்களா? இதையெல்லாம் எதற்காக என்னிடம் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்?'

திரேசா திரும்பி என்னைக் கேட்டாள்.

'நீங்கள் அவருடைய நண்பர்தானே?'

'அப்படியானவர் எப்படி என்னுடைய நண்பராக இருக்க முடியும்?'

'அவருடைய 'புது வாழ்வுப் பயணம்' புத்தகத்தில் நீங்கள் அவரை நண்பர் என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே...... அவர்கூடத் தனது முன்னுரையில் உங்களை 'எழுத்தாள நண்பர்' என எழுதியிருக்கிறாரே'

'அதெல்லாம் அவருடைய அவ்வாழ்க்கையைப்பற்றி நான் அறிய முன்னர் நடந்தது. இப்பொழுதெல்லாம் அவரை எப்படி நண்பர் என்று அழைப்பது!'

'எனது கதையைக் கேட்ட பின்னர்தான் அப்படி நினைக்கிறீர்களா?'

'இல்லை'— இப்படிச் சொல்லிவிட்டு, அவசரப்பட்டு அப்படிச் சொன்னதற்காக வருந்தினேன். விவேகசந்திரன் 'அந்த' மாத்திரைகளும் கையுமாகத் திரிவதையும், தனது நூல் வெளியீட்டு விழாவுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர்கூட டாக்டர் கலாசோதியின் மகளுடன் தகாதமுறையில் நடக்க முற்பட்டு அவமானப்பட்ட கதையையும் அவளிடம் சொல்லக்கூடாது எனத் தீர்மானித்தேன். அதனால் சமாளித்து விட்டு 'என்ன சொல்லுகிறீர்கள்... ஆமாம்...' என்று தடுமாறினேன்.

திரேசா மிகுந்த கவலையுடன் சொன்னாள். "அப்படியானால் உங்களால் அந்த உதவியை எனக்குச் செய்ய முடியாது என்று சொல்லுகிறீர்கள்... நீங்கள்தான் அவரை இப்போது நண்பர் இல்லை என்கிறீர்களே...'


'நானாகவே அவரிடமிருந்து விலகிச் செல்கிறேன்— செல்ல விரும்புகிறேனே தவிர நாங்கள் அப்படி என்றும் மோதி விலகிக் கொண்டவர்களல்லவே... அதனால் நீங்கள் மேலே சொல்லுங்கள்...'

'அவர் எங்களுக்கு உதவி செய்து வந்ததாகச் சொன்னேன் அல்லவா? அதை இப்பொழுது நிறுத்தி விட்டார். எங்களால் வாழ்க்கையை நடத்தவே முடியாதிருக்கிறது. பழைய தொழிலையும் இப்பொழுது மேற்கொள்ள முடியாது. எனக்கு ஏற்பட்ட 'பெயர்' அப்படி... அவரது குழந்தை பசிக் கொடுமையால் தினமும் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கிறது. நீங்களாவது அவருக்கு இதைப் பக்குவமாக எடுத்துச் சொல்லி... நீங்கள் சொன்னால் கட்டாயம் அது நடக்கும்...'

அப்படி ஒரு நம்பிக்கை அவளுக்கு!

'என்னால் முடிந்தவரை உங்களுக்காக அவருடன் பேசிப் பார்க்கிறேன். ஒரு குழந்தையின் வாழ்வுக்காக எனது கௌரவத்தை விட்டுவிட்டு அவரோடு பேசிப் பார்க்கிறேன்'

திரேசா என்னையே நம்பிக்கை ததும்பும் விழிகளால் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் அவளைப் பார்க்காமலே சொன்னேன்.




'ஆனால் உங்களுக்கு நான் ஆரம்பத்தில் தந்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமைக்கு வருந்துகிறேன்'

'அப்படியானால்... என்ன சொல்லுகிறீங்கள்...' அவள் புரியாமல் கேட்டாள். நான் புரியும்படியாகச் சொன்னேன்.

'நீங்கள் சொன்னவைகளை எல்லாம் இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்றீர்களல்லவா?'

'ஆமாம். அதற்காக?'

'உங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமானால் அதெல்லாம் இரகசியமாக இருந்து பலனில்லை'

நீண்டதொரு இடைவேளைக்குப் பின்னர் எனது 'முன்னை நாள்' நண்பன் விவேகசந்திரனை வலியச் சென்று சந்தித்தேன். அவன் என்னைப் பார்த்த மாதிரியிலிருந்து நான் எதற்காக வந்திருக்கிறேன் என்பதை முன் கூட்டியே தெரிந்து கொண்டவன் போல் காணப்பட்டான்.

நான் அவனின் முகத்தையே பார்த்தவாறு சுற்றி வளைக்காமல் நேரடியாகவே அதைச் சொன்னேன்.

'உமது புத்தகத்துக்கு அறிமுகவுரை எழுதியதால் ஓர் இக்கட்டான நிலைமைக்கு நான் ஆளாகி விட்டேன்'

அவனது முகம் விகாரமடைந்தது. 'நீர் என்ன சொல்லுகிறீர்!'

'உம்முடைய 'ஆண்கள் ஜாக்கிரதை' கதையில் வரும் பொன்மணியும் பிள்ளைகளும் எனது வீட்டுக்கே வந்துவிட்டார்கள்'

'கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுமன்'

நான் திரேசா வந்ததையும் அதன் காரணத்தையும் சொன்னேன்.

அவன் அதைக் கேட்டு அதிர்ந்து போனான் என்பது அவனது முகத்திலேயே எழுதியொட்டியதுபோல் தெரிந்தது. 'அவர்கள் யாராக இருக்கலாம்' என்றவாறு சிந்தனையிலாழ்ந்தான்.

**( ஒரு மாதக் குறுநாவல் )**

அவனது அந்த வார்த்தைகளிலிருந்தும் அந்தச் சிந்தனை ஓட்டத்திலிருந்தும் அவனுக்கு இப்படிப் பல 'கேஸ்'களிருக்குமோ என்றுகூட எண்ணத் தோன்றியது. அதிலிருந்து நான் சொல்வது எதுவாயிருக்கும் என்று இனம் காண முற்படுகிறான்!

சிறிதுநேர மௌனத்தின் பின் அவன் சொன்னான்.

'யாரோ எனது கதையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி 'பிளாக்மெயில்' செய்ய முன்வந்திருக்க வேணும்'

அவன் நன்றாக நடிக்கிறான் என்பது தெரிந்து விட்டது. திரேசா சொன்ன கதையிலிருந்து மேலும் சில பகுதிகளை எடுத்து விளக்கினேன்.

'இப்பொழுதான் நீர் சொன்னதெல்லாம் விளங்குது ஓ...ஓ, அந்த மனிசியைப்பற்றிச் சொல்லுகிறீரா? அது ஒரு சைக்கியாற்றிக் கேஸ்'

'ஓமோம். இல்லாவிட்டால் அப்படி ஏமாந்திருக்க மாட்டாது' நானும் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்தேன்.

'ஐசே... உம்முடைய கதையைப் பார்த்தால் மனிசி சொன்னதைத்தான் நீரும் நம்புகிறீர் போலத் தெரிகிறது. சாப்பிடப்போன குற்றத்துக்காக மனிசி இப்படியெல்லாம் என்மீது வீண் பழி சுமத்தும் என்பது தெரியாமல் போச்சு' என்று கொதித்தவன் பின்னர் நிதானமாகச் சொன்னான்.

'எனக்கும் உம்மைப் போலத்தான் இரக்க சுபாவம். அதனால் ஏதோ பார்த்துப் பாராமல் உதவி செய்தது உண்மைதான். ஆனால் அதுவே இப்படி ஓர் ஆபத்தில் கொண்டு வந்து சேர்க்கும் என்பது தெரியாமல் போய் விட்டது'

'உமது இரக்கமும் உதவியும் முன்னரைவிட இப்பொழுதுதான் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. அது உமது தவிர்க்க முடியாத கடமையும் கூட. காரணம் உமது குழந்தை அவளிடம்தானே வளர்கிறது...'

அவன் பரிதாபமான குரலில் கேட்டான்.

'இதை நீர் நம்புகிறீரா?'

'நம்பியபடியால்தானே இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்'

'அதற்கு ஆதாரம்!'

'அது இல்லாதபடியால்தான் அவள் அலைகிறாள்'

'என்ன சொல்லுகிறீர்?'

(வளரும்)

---

# அழகு குலுங்கும் வசந்த காலம்
# அதில் சிறந்தது சித்திரை மாதம்

தமிழர்தம் ஆண்டுப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் இரண்டும் ஒன்றேதான். மாதங்களில் சித்திரை சிறந்ததாகவும் முதலாவதாகவும் அமைந்துள்ளது. இம்மாதத்தில் மல்லிகையும் முல்லையும் மலர்ந்து மணம் வீசி மாநிலத்தை மகிழ்விக்கின்றன. தேமாவும் தீம்பலாவும் அரும் பழங்களைப் பாருக்கு நல்கி மக்கள் நாவினுக்கு நல்ல சுவையினைக் கொடுப்பதும் இக்காலத்திலே தான். யக்ஞயாகம், உபநயனம் போன்ற வைதீக காரியங்களைச் செய்வதற்கும் இம்மாதமே சிறந்ததென அப்பெரியோர் கூறுவர்.

வருஷ ஆரம்பம் நன்றாக இருந்தால் ஆண்டு முழுவதும் நன்மை தரும் என்பது நமது கொள்கை. ஆறு பருவங்களில் சிறந்தது இளவேனிற் பருவமாகும். இளவேனிற் பருவத்திலும் முதலாவதாக அமைந்தது சித்திரை மாதமாகும். பருவங்களுள் வசந்த பருவமாக நான் இருக்கின்றேன் என்று கண்ணன் கீதையிலே கூறுகின்றார். சித்திரை நட்சத்திரம்பூரணையோடு கூடியகாலம் இது வாதலால் இதற்குச் சித்திரை என்று பெயர்வந்தது. இது இராசிச் சக்கரத்திலுள்ள பன்னிரண்டு இராசிகளுள் ஆறுவதான கன்னிராசியிலும் ஏழாவதான துலா ராசியிலுமுள்ள நட்சத்திர மண்டலத்திற்குப் பெயர். அச்சுவினி முதலாக எண்ணும் வரிசையில் பதினான்காவது. அதாவது நடுநட்சத்திரம்.

பல இடங்களில் வருடப்பிறப்பின் அன்றைக்குப் பஞ்சாங்கம் வாசிக்கும் பழக்கம் ஒன்று தொன்று தொட்டு இருந்து வருகின்றது. திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்துமே பஞ்சாங்கங்கள் எனப்படும். திதி நன்மையை விருத்தி செய்வது; வாரம் ஆயுளை வளர்க்கும்; நட்சத்திரம் பாவத்தை நீக்கும்; யோகம் ரோகத்தை நீக்கும்; கரணம் வெற்றியைத்தரும்.

வசந்தத்தில் மலரும் வேப்பம்பூவை பச்சடியாகச் செய்து பகிர்ந்துண்பர். சிறிது கசப்பும் இனிமையும் கலந்தது வேப்பம்பூ பச்சடி. இது

> பருவங்களில் சிறந்தது இளவேனில். இளவேனிற் பருவத்தில் முதல் மாதம் சித்திரையாகும். சித்திரை பற்றிய சிறப்புக் கட்டுரை இது

கசப்பிலும் தித்திப்பு உண்டு, தித்திப்பிலும் கசப்பு உண்டு என்பதையும், இனிப்பும் கசப்பும் கலந்தது வாழ்க்கை என்றும், கசப்பையும் இனிப்பாக்கிக் கொள் என்பதையும் கற்பிக்கின்றது.

### கசப்பையும் இனிப்பாக்கிக் கொள்ள தத்துவம் காட்டும் வேப்பம் பச்சடி

**உறுதி பூண்போம்**

உலகில் கவலையில்லாத மனிதர் யாருமில்லை. எங்கும் துக்கமே குடிகொண்டிருக்கிறது. யாரும் விரும்புவதும், நாடுவதும் தேடுவதும் இன்பம் ஒன்றே. ஆனால் அவ்வின்பத்தை எவ்வாறு அடைவது? இன்பம் எங்கே இருக்கிறது? அது எப்படி இருக்கும்? என்று தேடித் தேடி அலுத்துச் சலிக்கின்றார்கள் மக்கள்.

தமிழர் சமுதாயம் எல்லாருக்கும் ஒட்டுமொத்தமாகத் துன்பம் வந்திருக்கிறது. இ... நாட வேண்டும். அந்நியமான

ஆகும். அந்த நிறைந்த இன்பத்தின் நிறைவினால் தான் நாம் துன்பத்தை மறக்கமுடியும். ஆகவே நாம் எல்லோருமே குறிப்பிட்ட ஒரு நேரத்தில் குடும்பமாகச் சேர்ந்து வழிபாடு செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வோமாக! இத்துன்ப நிலையிலும் அல்லது வேறு எக்காலத்திலும் மனிதனுக்கு ஆறுதலையும் அமைதியையும் சாந்தியையும் அளிக்கவல்லது இந்த வழிபாடு ஒன்று தான்.

'துன்பமின்றித் துயரின்றி என்றும் நீர் இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்' என்பது அப்பர் சுவாமிகளுடைய திருவாக்காகும் உலகில் இன்பம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. துன்பக் கடலைக் கடந்து கரை ஏறி, அழியாத நித்திய இன்பத்தை அடையவேண்டுமானால் தினமும் தவறாது

மாக! பிரார்த்தனை செய்யாது. நான் உண்பதில்லை என்று இப்புத்தாண்டில் சபதம் எடுத்துக்கொள்வோமாக! ஒரு நிமிடப் பிரார்த்தனையே போதியது. அருணகிரியார் "அரை நிமிட நேரம்" தியானம் செய்தாலே போதும் என்கிறார். ஒரு நாளைக்கு சாப்பாடு தவறினாலும் பிரார்த்தனையில் தவறக்கூடாது என்ற நிலை மனதில் உறுதிப்பட வேண்டும்.

**பிடியரிசி**

வீட்டில் ஒவ்வொரு பிடி அரிசிப் பாத்திரம் வைத்துக் கொள்ளுங்கள்; ஒரு தரும உண்டியலும் வைத்துக் கொள்ளுங்கள். சோறு ஆக்கும்போது ஒவ்வொரு வேளையும் ஒவ்வொருபிடி அரிசி தருமமாகப் போடுங்கள். ஒவ்வொருநாளும் குறைந்த சில்லறையாவது தரும உண்டியலில் போட்டு வாருங்கள் இது குடும்பம் முழுவதுமே சேர்ந்து செய்யும் தருமமாகும். இன்று நம் தமிழ்மக்கள் தினமும் அகதிகளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதன் மூலமும் நாம் உதவி செய்யலாம். ஆறுமுகநாவலர் பெருமான் இந்தப் பிடி அரிசி மூலம் பல தருமங்களுக்கு வழிகாட்டியுள்ளார். இந்தப் புதுவருடத்தில் இத்தருமத்தையும் ஆரம்பியுங்கள் வீட்டிக்குழந்தைகளுக்கும் தரும சிந்தனை

**ஆத்மஜோதி நா: முத்தையா**

பிரார்த்தனை செய்வோமாக!

புது வருடத்தில் புதிய சில உறுதிகளை எடுத்துக் கொண்டு அதனை நடைமுறையில் கொண்டு வருவோமாக; அதிகம் வாசித்து அதிகம் கேட்டு ... சிறிய உபதேசத்தையாவது கடைப்பிடிப்பதிக்

கவே உண்டாக்கியவர்கள் ஆவிர்கள்.

வாழைக்கட்டி, வயிற்றைக்கட்டி வான் பொருள் திரட்டி இம்மியும் ஈயாது இறுக்கிக் கட்டி, இருப்புக்காட்டி, இழுத்துப்பூட்டி, இறந்து விடுகிறான் தந்தை மகன் தலையெடுக்கிறான். அப்பன்காத்த பொருளை எல்லாம் மணத்துவிடச் சூறாவளி வந்து சிதற



### வந்தபகை ஓடி விடும்!

பள்ளியினை மூடிப் பாலகரின் படிப்புக்கே
கொள்ளியினை வைத்துக் கொளுத்திடவே
எண்ணமிடின்
தென்னுதமி முன்னை இளஞ்சரிப்பாள்; தரணியிலே
வள்ளுவனின் குறளுக்கே உவமையென வாழ்கின்ற
நல்லமுத யாழ்ப்பாண நகரத்தின் முன்னெல்லாம்
கல்லறைகள் மூடிக் குவிந்தாலும்; கோட்டை(ச்)
செல்லடித்து எமதுயிர்கள் சிவலோகம்
சென்றிடினும்
தொல்லைகளைத் தூசாக்கித் துணிவுடனே
முன்னிற்போம்!
கூர்வாளைத் தூக்கிக் கொதிக்கின்ற நெஞ்சுடனே
தேர்மீது செவிறு நிரமுடன் போர் புரிந்த
வீரர்களையெல்லாம் கற்பனைகள் அல்ல!
பார்போற்ற அரசாண்ட பண்டார வன்னியனும்
மார்தட்டி யாண்ட மேன்மையுறு சங்கிலியனும்
வேர்விட்டு எம்முள்ளே விசாலமுற நிற்கையிலே
ஆர்தாக்கி வெம்மை அழித்திடலாம்!
போர்முரசு ஒலிக்கட்டும்! புதுயுகம் பிறக்கட்டும்!
சித்திரையில் தமிழ்மனச் சிறிவரும் இளம்பரிதி
சித்தமுடன் போர்ப்பரணி சங்கெனவே
முழங்கட்டும்!
சித்திரமும் அழகும் சாட்சிகளாய்
நிற்கையிலே
வந்தவரை விரட்டிடலாம்! மறக்கொடியை
நாட்டிடலாம்
வெந்தமன வேதனையில் வீழ்ந்துயினி
மேங்குவதேன்?
சிந்தையிலே புத்தொளியைச் சிறப்புடனே
ஏற்றிடின்
வந்தபகை போய்விடும்; வேதனையும் தீர்ந்துவிடும்
சொந்தநிலம் வந்துவிடும்; சுதந்திரமும்
மலர்ந்துவிடும்?

- மு. வே. யோ. வாஞ்சிநாதன் -

---

# பயன் கருதாமல் பணி செய்த மன்னன்

மிகுந்த வெப்பமுடைய அடிசுடும் பாலை நில வழியிலே வறியவனாகிய புலவன் ஒருவன் செல்கிறான்.

அங்கு அவன் கண்ட காட்சி அவனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

பாணன் ஒருவன் பசும் பொன்னால் செய்யப்பட்ட பொற்றாமரை மலரை அணிந்திருக்கிறான் சிறந்த அணிகலனை அணிந்த அவனது பக்கலில் -விறலி- பொன்மாலை புனைந்து இருக்கிறாள் நிறைந்த செல்லும்

முன்பு நாம் உள்ளிலும் வறுமையுடையவர்களாய் இருந்தோம். கொடுப்பதால் தனக்கு மறுமை இன்பமாவது கிடைக்குமெனக் கருதாது கொடுப்பவன்

### இலக்கியக் காட்சிகள்

அவன் எவ்வளவாகிலும் கொடுப்பதே நன்றென்று நண்ணுபவன். பிறரது வறுமையைக் கண்டதும் அவன் தன் கைவண்மையைக் காட்டு

## புறநானூறு தீட்டும் ஓவியம்

குதிரைகள், நெடிய தேரிலிருந்து அவிழ்ந்து களைப்பாறுவதற்காக கட்டப்பட்டிருக்கின்றன. பாணனும் விறலியும் தமது சொந்த ஊரில் இருப்பது போன்ற உணர்வோடு, அந்தப் பாலை நிலத்தில் இருந்து இளைப்பாறுகிறார்கள்.

அவர்களுக்கு ஏற்பட்ட மனக்குளிர்ச்சி, புறத்தையும் கொடிய வெம்மை தரும் பாலைநிலத்தையும் குளிரச் செய்துவிட்டது போலும்!

இரவலனாகிய புலவன் பாணனை நோக்குகிறான் தேரிலிருந்து குதிரையை அவிழ்த்துக் கட்டிவிட்டு உங்கள் ஊரில் இருப்பது போல, இந்தக் கொடிய பாலைநிலத்திலிருந்து இளைப்பாறுகிறீர்களே! நீங்கள் யார்?" என்கிறான்.

'எம்மை யாரென்று கேட்கின்ற இரவலனே! உன்னுடன் வரும் உறவினர் வறுமையால் வாடியிருக்கிறார்கள் நீயும் கடும்பசி உடையவனாகக் காணப்படுகின்றாய் போரில் வெல்லும் வேலையுடைய அந்தவ

கிறான். அவனைக் கண்ட பின்பு, நாம் பொன்னணி அணிந்து அகமகிழ்ந்திருக்கும் இந்நிலைக்கு வந்தோம்,

உடையைக் கொடுத்தால் மயில் அதை உடுக்க மாட்டாது; குளிரால் நடுங்கும் போதும் அதனைப் போர்க்கமாட்டாது இது எம்மரசன் பேகனுக்குத் தெரியும். இருந்தும் அவன் குளிரால் நடுங்கிய மயிலின் கூதலைப் போக்குவதற்

**ஆ. நடராசா**

காக அதற்குப் போர்வையைக் கொடுத்தான். மயிலுக்குப் போர்வையைக் கொடுப்பதால் தனக்கோ மயிலுக்கோ பிரயோசனம் உண்டா என அவன் யோசிக்கவில்லை. குளிரால் நடுங்கும் மயிலைக் கண்டவுடன், 'பாவம் இது போர்வை இன்றி வருந்துகிறதே!' என்னும் எண்ணமே அவன் உள்ளத்தில் உதித்தது அதனால் அவன் மயிலின் இவ்வாமையைப் போக்க அதற்குப் போர்வையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலவளங்களை முறையாகப் பயன்படுத்த உதவிடும் தொழில்நுட்ப அறிமுக அரங்கு

எமது மண்ணில் எம் உள் காணிகளில் எங்கள் பணத்தில் தங்கியிருப்போம்.

ஒவ்வொருவரதும் அறிவும், ஆற்றலும் விணடிக்கப்படாமல் எமது மண்ணிலேயே எமது மக்களின் சுபீட்சமான எதிர்காலத்துக்குப் பயன்படவைக்கப் படவேண்டியது நம்மனைவரதும் கடமை

இதுவே இம்மாதம் 19, 20, 21 ஆம் திகதிகளில் ஆய்வு நிறுவனத்தினர் சாவகச்சேரியில் ஒழுங்குசெய்த தொழில்நுட்ப அறிமுக அரங்கின் குறிக்கோளாக அமைந்திருந்தது

பொருளாதார தன்னிறைவு மூலமே விடுதலை முழுமைபெறமுடியும்.

வெளிநாட்டுப் பொருள்களுக்கு எமது ஈழத்து உற்பத்திகள் எவ்வகையிலும் சளைத்தவைகள் அல்ல என்ற முறையில் பலவித ஆராய்ச்சிகளைச் செய்து வெற்றிகண்டு வருபவர்கள் ஆய்வு நிறுவனத்தினர்.

இவ்வுற்பத்திக் கண்காட்சிப் பொருள்களை மக்கள் பார்வைக்கு வைக்கப்படமுன் பத்திரிகையாளர்களின் பார்வைக்கே வைக்கப்பட்டிருந்தன.

இவைகள் அனைத்தும் யாழ்குடாநாட்டின் மூலவளங்களா? எனக்கே ஆச்சரியமாக இருந்தது

வரிசைக் கிரமமாக எமக்கு அப்பொருள்களின் தன்மைகள் விளக்கப்பட்டன.

சஞ்சீவி வாசகர்களுக்காக நாம் இதை இங்கே தொகுத்துத் தருகிறோம்:-

எம்மக்கள் மத்தியில் பொதுமைப் படுத்திய செயற்திட்டங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

கல்வித்துறை, விஞ்ஞானத்துறை, விவசாயத்துறை, மீன்பிடித்துறை, தொழில் நுட்பத்துறை என தனித்தனியாக இந்தத்துறைகள் அணுகப்படுகின்றன இதற்கான கல்விசாதிகளும் தருந்தமுறையில் செய்யப்படாமல் நடைமுறைப்படுத்தப்படுகிறது

இவ்வகையான செயற்பாடுகளால் எமக்குத் தேவையான தொழில் நுட்பம் வளர்க்கப்படாமல் இருக்கிறது

> ஆய்வு நிறுவனத்தினர் சாவகச்சேரியில் நடத்திய தொழில் நுட்ப அறிமுக அரங்கு பற்றிய கண்ணோட்டம் இது.

### மட்பாண்ட உற்பத்தி

யாழ் குடாநாட்டில் உள்ள களிமண்ணைக் கொண்டு சட்டி பானை வனைந்தால் நாம் பார்த்திருக்கிறோம் அறிந்திருக்கிறோம்.

ஆனால் நாம் தேனீர் குடிக்கும் கப் அன்சோசர் கூட அங்கு களிமண்ணினால் வெகு திறமையாகச் செய்யப்பட்டிருந்தது

ஏன்? தண்ணீர் வடிக்கும் (f)பில்ட்டர் பூவாஸ், மசலம் கழிக்கும் சேரமிக்ஸ்கோப்பை கூட ஈழவளநாட்டின் களிமண்ணினால் உருவாக்கப்பட்டிருந்தன.

மண் பல தேவைகளுக்கு மனிதனால் பயன்படுத்தப்படுகிறது இதனை நவீன மயப்படுத்துமுகமாகவே பல்வேறுவகையான தட்டுக்கள் கோப்பைகள், குவளைகள், பாத்திரங்கள் உயிர்வாயு அடுப்பு இருக்கைகள் என்பனகூட மிக மலிவானதாக தயாரிக்க முடியும் என்பதை ஆய்வு நிறுவனத்தினர் அங்கு விளக்கிக் காண்பித்தனர்.

நாங்கள் சாதாரணமாக பாவிக்கும் செரமிக் உபகரணங்களைவிட களிமண் எல்லவவோ சிறந்தது எனவும் விளக்கப்பட்டது

## தன்னிறைவு காண்பது விடுதலையின் ஒரு கூறு

### புல்லில் இருந்து பாவனைப்பொருள்கள்

சதுப்பு நிலங்களில் வளரும் கோரைப்புல்லைக்கொண்டு எமது மக்கள் பாய் இழைக்க மட்டும் பழகியுள்ளனர்.

ஆனால் அங்கு பாருங்கள், கோரைப்புல்லில் இருந்து பின்னப்பட்ட பலபாய்கள் பல கோணங்களில் தைத்து புதிய மெருகு ஊட்டியிருந்திருந்தன.

கதிரைகளுக்குக்கூட புல்லினால் இழைக்கப்பட்ட திரைகளும் அங்குள்ள கதிரைகளுக்குப் போடப்பட்டிருந்தன.

மின்விளக்குகளுக்கு போடும் 'ஷேட்' கூட மிக அழகாகச் செய்யப்பட்டிருந்தது சதுப்பு நில கோரையினப்புல் ஏராளமாக ஈழவளநாட்டில் கிடைக்குமானால் சாதாரண ஏழைக் குடும்பங்களுக்கு கூட தொழில் வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

### உணவுப் பொருள்களைப் பாதுகாத்தல்

ஈழவளநாடு ஒரு காலத்தில் விவசாயத்திலும் செல்வச்செழித்தது ஏழை விவசாயிகள் கூட எதுவித கஷ்டமுமின்றி தமது விளைபொருட்களை கடனுக்குடன் சந்தைப்படுத்தி வந்தனர்.

ஆனால் தற்பொழுது நிலைமை மாறிவிட்டது இன்றைய விவசாயப் பொருள்கள் பல சந்தைப்படுத்த முடியாத நிலையில் அழிகின்றன.

ஆனால் இனிமேல் அப்படியான நிலை தொடரவேண்டியதில்லை.

எமது பிரதேசத்தில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியாத பருவங்களிலும் பெறவேண்டும் என்பதற்காக அவ்வப்போது விளையும் பருவகால மரக்கறிவகைகள், பழவகைகள், கீரைவகைகள் என்பனவற்றை தேவைக்கேற்ப பயன்படுத்தி நீண்ட காலத்துக்குச் சேமித்து வைப்பதற்கான வழிமுறைகளும் அங்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

தக்காளிப் பழத்திலே தக்காளி ஜாம் செய்யப்பட்டிருக்கிறது. வெங்காயத்தாளில் ஊச்சாறு செய்யப்பட்டிருக்கிறது. ஏன்? பயற்றங்காய்,

**க. இரத்தினராஜசிங்கம்**

முருங்கைக்காய் என்பன கூட தகுந்த முறையில் உலர்த்தப்பட்டுப் பக்கப் பண்ணப்பட்டுள்ளன

இலைவகைகளான கீரை, கறிவேப்பிலை, பீற்றூட் என்பனகூட நன்கு உலர்த்தப்பட்டு வத்தலாக அங்கு வைக்கப்பட்டுள்ளன

இதேபோல் பழவகைகளைக்கூட பழுதடையாமல் பாதுகாக்க ஆய்வு நிறுவனத்தினர் புதிய உத்திகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

### புகையூட்டிய மீன்

மீனை நீண்ட நாட்களுக்கு மேல் பேணிப் பாதுகாப்பதற்குத் தற்பொழுது உப்பிட்டுக் கருவாடாக்கும் முறையே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் ஒரவு பருமன் அதிகம் இல்லாத மீன் வகைகளை வெட்டி உப்பிட்டுப் புகையூட்டுதல் மூலம் உலர்த்தி சுவையானதாகப் பேணமுடியும் என்பதையும் அவர்கள் அங்கு காட்டியுள்ளார்கள்.

சாதாரண கருவாட்டை விட மிகவும் துப்புரவான முறையில் இந்த மீன் புகையூட்டல் நடைபெறுகிறது.

இலகுவானதும் வரவேற்கத்தக்கதுமான இம்முறை பொது மக்களால் நடைமுறைப் படுத்தக்கூடிய ஒன்றாகும்.

வெளிநாட்டவர் கூட இதனை விரும்பிச் சாப்பிடுவதற்கு ஏற்ற வழியில் அதனைச் சுவையூட்ட முடியும்.

### பாலுணவுப் பொருட்கள்

பாலில் இருந்து தயிர், மோர், நெய், சீஸ்பால் என்பன செய்வதைப் பார்த்திருக்கிறோம்.

பால் இறைச்சி என்பதைப் பார்த்திருக்கிறீர்களா? சுவைத்திருக்கிறீர்களா?

இதுவும் ஆய்வு நிறுவனத்தினரின் கண்டுபிடிப்பு

சிறிய முதலீட்டுடன் பாலுணவுப் பொருள்களைத் தயாரித்தல் பற்றிய அறிமுகங்களை வழங்குவதன் மூலம் கால்நடை வளர்ப்புத் துறையை விருத்தியடையச் செய்யலாம்.

இந்த வகையில் பாலில் இருந்து பட்டரைப் பிரித்தெடுக்கவும், தயிரிலிருந்து வெண்ணையைப் பிரித்தெடுக்கவும் பயன்படுத்தும் மத்து சிறிய தொழில் நுட்பத்தினாடாக வடிவமைக்கப்பட்டுள்ளது

### உயிர்வாயுப் பயன்பாடு

கால்நடைக் கழிவுகளில் இருந்தும் தாவரக் கழிவுகளில் இருந்தும் மிக இலகுவில் உயிர்வாயுவைப் பெற்றுக் கொள்ளலாம்

இதன் மூலம் சிறந்த சுசிபொருள் கிடைப்பதோடு தரமான பசளையையும் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் மூலம் பெற்றோமக்ஸ், ஸ்ரிக்கைப் பெட்டி, குளிரூட்டல் பெட்டி, நீரிறைக்கும் இயந்திரம், மோட்டார் சைக்கிள் என்பனவற்றைக் கூட இயக்க முடியும் என்பதை அவர்கள் வெளிக் கொணர்ந்துள்ளார்கள்.

உயிர்வாயுப் பயன்பாட்டு மூலம் நாம் கூடிய பணத்தினைச் சேமிக்க முடியும்.

சாவகச்சேரியில் உள்ள பிரபல தொழிலதிபர் திரு நவரத்தினம் இதன் பெறுபேறுகளைத் தினமும் பெற்று வருகிறார்.

அவருடைய தேனீர்க்கடை 'பொயிலர்' உயிர்வாயு சக்தி மூலம் இயங்கி வருகிறது.

மின்சாரம் மூலம் இயங்கி வந்த பொயிலருக்கு மாதம் இரண்டாயிரம் ரூபா பணம் கட்டியவர் தற்பொழுது இருநூறு ரூபா மட்டுமே தாம் செலவிடுவதாகத் தெரிவித்தார்.

அவருடைய மின்தறி ஆலையைக்கூட உயிர்

(தாயகம்)

வாயுப் பயன்பாடு மூலம் இயக்க வைப்பதற்கு ஆய்வு நிறுவனத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

### உமி, சிரட்டைக்கரியிலிருந்து உச்சப் பயன்பாடு

ஈழவளநாட்டில் மிகச் சாதாரணமாகக் கிடைக்கும் உமி, சிரட்டைக்கரி போன்றவற்றைப் பதப்படுத்தல் மூலம் பெறப்

(7ஆம் பக்கம் பார்க்க)

## பயன்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

கொடுத்தான் அவன் பயனை எதிர்பாராத இக்கொடையைக் கண்டு கொடுப்பவன். அதனால் அவன் கொடை மடம் படுகிறான்

'மதயானைகளும் மிடுக்குள்ள குதிரைகளும் அவன் படையில் இருக்கின்றன இருந்தும் அச்செருக்குக் காரணமாக வீரர் அல்லாதோரையும் புறமுதுகிட்டவரையும் மூத்தோரையும் இளையோரையும் பெண்களையும் போரில் ஈடுபடாதோரையும் கொல்லாதவன்; போர்க்களத்திலே செய்யக்கூடாதவற்றைச் செய்யாமையால் படை மடம் படாதவன்'

இவற்றையெல்லாம் இராவணனுக்குக் கூறி 'நீயும் பேகனிடம் சென்றால், நீ உன் வறுமையைப் பற்றிக் கூற முன்பே அவன் உனது வறுமையைப் போக்குவான்' என்கிறான் பரிசில் பெற்ற பாணன்.

இவ்வாறு பேகனின் வள்ளன்மையைப் புகழ்ந்து இரவலனைப் பேகனிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்துவது போல-வழிப்படுத்துவது போல-பாணர் என்னும் புலவர் பேகனைப் புகழ்ந்து பாடிய பாடல் வருமாறு:-

'பாணன் சூடிய பசும்பொற்றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட்டசைஇ
ஊரீர் போலச் சுரத்திடையிருந்தனிர்
யாரீரோவென வினவலானாக்
காரென் ஒக்கற் கடும்பசி இரவல
வென்வேலண்ணற் காணூஉங்கேளை
நின்னினும் புல்லியேம் மன்னே இனியே
இன்னேமாயினேம் மன்னே என்றும்
உடாஅ போரா வாகுதல் அறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணையாயினும் ஈத்தல் அன்றியும்
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர் வறுமை நோக்கின்றவன் கைவண்மையே.

புறம்:141

(மாணிழை - சிறந்த ஆபரணம் கடும்பரி-வேகமாகச் செல்லும் குதிரை அசைஇ - அசைதல் - ஓய்வெடுத்தல் சுரம் -பாலை நிலம் யாரேன் ஒக்கல்- வறியசுற்றம். வென்வேல்- வெற்றிவேல், அண்ணல் - அரசன்- தலைவன் புல்லியேம் - வறியேம் - படாம் - சீலை - மஞ்ஞை - மயில் - கடாம் - மதம் கலி - செருக்கு, மான் - குதிரை. மடம்படுதல் - மடமையுடையவனாதல் )

## தமிழர்--

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றனர்; சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்படுகின்றனர் சடலங்கள் இரகசியமாக அழிக்கப்படுகின்றன.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை இதை மறுக்கமுடியாத ஆதாரங்களுடன் வெளிப்பிட்டுள்ளது

நிசசி சித்திரவதை நடைபெறும் ஆறு நாடுகளில் ஒன்றாக இலங்கை மீது மனித உரிமை ஆணைக்குழு குற்றஞ் சாட்டியுள்ளது.

வன்செயலில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உணவுப்பொருள், விட்டமின் குளிகைகள் வழங்கவும் 'கலிபோர்ணியா ஒப்பரேஷன்' என்ற அமைப்பு முன்வந்தது ஆனால் அமைப்பு அதிகாரிகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று இவற்றை வழங்க இலங்கை அரச அனுமதி மறுத்துவிட்டது

ஆகக்குறைந்த இந்த மனிதாபிமான உதவிக்குக்கூட அனுமதிக்கப்படவில்லை

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும். நிவாரண உதவிகள் வழங்கப்படவேண்டும்.

இலங்கையில் இருந்து மக்கள் காட்டுமிராண்டித்தனமாக அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போது நாம் மௌனம் சாதிக்கமுடியாது

இந்த அடக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்களின் சார்பாகக் குரல்கொடுங்கள். *

## போராட்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றின் இருவேறு கால கட்டங்களில் வாழ்ந்த இவர்கள் அவ்வரலாற்றுப் போக்கின் இருவேறு தன்மைகளை நிலைகளைப் புலப்படுத்தி நிற்பவர்கள் எனவே மக்களியக்கங்களைக் கட்டியெழுப்புபவர்கள் தத்தம் ஆளுமைகளை இனங்கண்டு கொள்வதற்கும் வளர்த்துக் கொள்வதற்கும் பங்களிப்புச் செய்வதற்கும் அப்பரையும் சம்பந்தரையும் கற்கவேண்டியது அவசியமாகிறது. சமயம் சார்ந்த நாயன்மார் என்று எல்லைப்படுத்தாமல் சமூக இயக்கப் பங்காளிகள் என்ற வகையில் அவர்களை அணுகும் பொழுதே அவர்களது ஆளுமைகளைச் சரியான தளத்தில் இனங்கண்டு கொள்ள முடியும்

## மரணத்தின் பின் மனிதன்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் குறிப்பிட்ட இறந்தவரின் ஆவி உயிருடன் இருக்கும் தன் உறவினருடன் கூட ஒரு மீடியம் மூலமாகவே தொடர்புகொள்ளும்

ஒரு மீடியமாகப் பணியாற்றுவதற்கு விசேட அறிவோ, தனிப்பட்ட ஒரு சக்தியோ, தெய்வீகத்தன்மையோ, ஆண் பெண் என்ற வேறுபாடோ, இனம் மதம் வயது என்ற கட்டுப்பாடோ தேவையில்லை எம் புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரிஜினலின் கொடையோ அல்லது ஒரு சக்தியோ அமைந்த ஒருவரே, மீடியமாகச் செயல்பட வல்லவராவார். அப்படிப்பட்ட ஒருவரை எப்படி கண்டுகொள்வது?

ஒரு மீடியத்தை அனுபவவாயிலாகவும், ஆவியுலகத்தொடர்பு நிகழ்ச்சிகளின்போது அவருக்கு ஏற்படும் 'உடல் உள' மாற்றங்களைக் கொண்டுமே தேர்ந்தெடுக்கவேண்டும். ஆவி விதமாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் தம்மிடம் உள்ள இயற்கையான ஆபூர்வ சக்தியை விருத்திசெய்து அவர் மூலம் ஆவிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தலாம்.

ஆவிகளுடன் தொடர்புகொள்ள வருவோர்களில் அதிகமானோர் தமது மூத்தோரிடம் குடும்ப விவகாரங்களில் புத்திமதிகளையும், பணம் கொடுக்கல் வாங்கல் பற்றியும், இரகசிய சேமிப்பு அல்லது புதையல் போன்ற தகவல்களைப் பற்றியும் அறியவருகின்றனர்

சாதாரண குடும்பம், அதன் சுற்றுடல் சம்பந்தமான கேள்விகள் திருப்திகரமாய் பதிலளிக்கப்பட்டாலும் தமது இஷ்டப்படி ஆராய்ச்சிக் கேள்விகளுக்குப் பதில் கிடைக்காவிட்டால் பலர் இதைப் பொய், மோசடி என்று கூறுகின்றனர்.

மதங்களின் எதிர்ப்பும், விஞ்ஞான ரீதியான நிராகரிப்பும் பகுத்தறிவுவாதிகளின் நாத்திக வாதங்களும் ஆவியுலக உண்மைகளை அறிந்து கொள்ளும் முயற்சியை வளரவிடாது தடுக்கின்றன. ஆனால் மேற்கத்திய நாடுகளில் இத்துறையில் நம்பிக்கை கொண்டவர்கள் பல, சமூக அச்சமின்றி வெளியாகவே இதற்கு உற்சாகமான வரவேற்பளிக்கிறார்கள். பிரசாரமும் செய்கிறார்கள் சில அரிய நூல்களும் எழுதியுள்ளார்கள்.

நம் நாட்டிலும் ஆவி உலகத்தொடர்பு நிகழ்ச்சிகள் ஆங்காங்கே பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன. பலர் நம்பிக்கை கொண்டவர்களாயும் இருக்கிறார்கள். *

## உங்கள் அச்ச...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றிவிருந்து மற்றென்றுக்குத் தாவி ஈற்றில் அறிவு வளர்ச்சியைத் தடைசெய்துவிடுகிறது

ஒருவர் அச்ச உணர்வுக்கு ஆளாகும்போது உடலின் பல்வேறு உள் உறுப்புகள் ஆபத்தை எதிர்கொள்வதற்கதாக தடுப்புச் சக்தியுள்ள பொருள்களை உற்பத்தி செய்கின்றன. உண்மையில் ஆபத்து ஏற்படாதவிடத்து இவை வீணாகிப் போகின்றன. அடிக்கடி அச்ச உணர்வுக்கு ஆளாகும் ஒருவருக்கு நாளடைவில் இந்த உள்உறுப்புகள் கட்டுப்பாடின்றிச் செயற்பட ஆரம்பித்துவிடும் இதனால் உடல் நலம் பாதிப்படைகிறது

தேவையற்ற கற்பனைகளால் சிலர் அச்சமடைகின்றனர். இவர்களின் கனவுகளும் பயங்கரமானவையாகவே அமையும். இவர்கள் அஜீரணக் கோளாறு, அல்சர், புற்றுநோய் போன்ற வியாதிகளுக்கு ஆளாகுகிறார்கள் நமது கற்பனைகள் புதிய துறையில் செல்லவேண்டும்.

### மரணபயம்

மரணத்தை எண்ணி அச்சமுறுவோர் பலர் 'மரணம் என்பது இயற்கையானது. நிச்சயம் ஒருநாள் வருவது! அதுவரும்போது அதனை எதிர்கொள்வோம். இப்போது வாழ்க்கையை வளமுறச் செய்வோம்' என எண்ணி தன்னம்பிக்கையுடன் செயற்படவேண்டும்.

உண்மைக்கு விசுவாசமாக நடத்தல், அறிவை வளர்த்தல், மனதைக் கட்டுப்படுத்தல், பொறுமையைக் கடைப்பிடித்தல், இறையருளில் நம்பிக்கை வைத்தல், அயலவரை நேசித்தல், எதிரியிடமும் அன்பு செய்தல்— இவை அச்சத்தைப் போக்கும் ஆயுதங்களாகும்.

அச்ச உணர்வு நம்மை ஆட்கொண்டால் எத்தனை அரண்களை அமைத்தாலும் அவற்றால் பயனில்லை. எனவே அச்சம் அகற்றி அரண் அமைப்போம் *

## அழகு..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்பது போல் செலவிடுகின்றான் கோபியின் பொருள் போகியின் மருளால் போக்கடிக்கப்படுகிறது ஊரார் எல்லாம் பையன் தலைக்கொழுத்து மல் திரிகிறான் என்பர். இவ்விதமே அதிகாரமோ, பொருளோ, ஆற்றலோ ஒருவனுக்கு எதிர்பாராமல் அதிகமாய் வந்து, அவன் பிறரைமதியாது இறுமாந்து திமிர்வழியிலே நடந்தால் அவன் தலை கால் தெரியாமல் திரிகிறான் என்று சொல்லுவார்கள்

### தருமம் வெல்லும்

கந்தபுராணத்தின் உள்ளுறைப் பொருள் நன்றியைக் கொன்றவனுக்கு உய்தி இல்லை என்பது. சிவபெருமானிடம் எல்லா வரங்களையும் பெற்றுக்கொண்ட சூரபத்மா சிவபெருமானுடையமகன் முருகனுக்குத் தீங்கு செய்ய நினைத்தான் அதர்மம் செய்தவனை அதர்மமே அழிக்கும் தருமவழியில் வாழ்பவனை அத்தருமமே வாழவைக்கும். நாம் தருமத்தைக் காப்பாற்றினால் தருமம் நம்மைக் காப்பாற்றும் என்பது உபநிஷதத்தில் கூறப்படும் வாக்கியமாகும். இரு பகுதியாருடைய கணக்குகளையும் சித்திரபுத்திரனார் எழுதி வருகின்றார் என்பது இந்துக்களுடைய நம்பிக்கையாகும்

"முத்தமிழ்போல் முக்கடலும் மும்முனை வளரும் உத்தமியே சித்திரைத் திங்களில் உதித்தவளே [illegible] சித்திரைத் திங்களில் [illegible] செய்வாய் [illegible]"

## சாமத்தியச்...


(4ஆம் பக்க தொடர்ச்சி)

பார்த்திருக்கிறார். தம்பிக்குப் பல பகைவர், எனவே எப்போதும் ஆபத்து இருக்கிறதென்பது அவருக்குத் தெரியும் அந்த ஆபத்து எதிரியினாலா அல்லது மற்றப் பகைவர்களினாலா என்னும் சந்தேகம் இருக்கிறது சாமத்தியச் சாட்சிக்குச் சம்பவத்தைச் சாதகமாக்கி எதிரியின் மேல் பழியைப் போட யாரோ கொலை செய்துள்ளனர். எதிர்க்கும் இக்கொலைக்கும் சம்பந்தம் இல்லை'

சாட்சியங்களையும், தொகுப்புரைகளையும் ஆராய்ந்த ஜூரர்கள் எதிரியைச் சுற்றமற்றவராகக் கண்டதைப்போல் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். *

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 64




அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி ...............

வயது ...............

விலாசம் ...............

ஒப்பம் ...............

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்.

**இடமிருந்து வலம்**

1. கற்புநெறி
6 இரத்தம்
7. காது
8. சிரித்தல்
9. அபராதம்
11 நடு
13 பெண் ஆடு மாறிக் கிடக்கிறது
14. தவறு
17. கவலை
18 விஜயம்
19. சேவை
21 வெகுமதி
22 வாழ்க்கையில் இதனைப் பெற்றால் கஷ்டப்படுகிறோம் ஆனால் இடைபட இல்லையே!

**மேலிருந்து கீழ்**

1. ஆறுவது அறிவு
2. செல்வம்
3. வாழ்க்கைப் போக்கை நிர்ணயிப்பது
4. தடி
5 துறவிகளின் உடை
7. புதல்வி
8. சமய வாழ்வே இதில்தான் பிறக்கிறது
10 பூமி தலைகீழாகி விட்டது
12 எண்ணெய்
15. சேர்
16 வரவேற்புக்குகந்த மங்களப் பொருள்
17. பொன்னை மினுக்கச் செய்வது
18. அரசாங்கம் அறவிடுவது
20. நேரக்கணக்கு மாறிக்கிடக்கிறது.

### சொற்சிலம்பம் போட்டி இல. 62 விடைகள்

**இடமிருந்து வலம்**

1 பெரியவெள்ளி 4. கரு, 5. சமயிகள், 6 காவாந்தி. 7 புக 9. அதாடி, 10. வானதி 11. கனி, 12. காசு 15. துரை, 16. உகமை வழி

**மேலிருந்து கீழ்**

1. பெருங்காயம் 2. வெகுமதி, 3 தெரு 4. கலியுகம், 5. சுந்தரவாலி, 8. வடி, 9 அற்பாகி, 11 இரை, 13 கனம், 14 ஆழி

### சொற்சிலம்பம் போட்டி இல. 62 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- திருமதி. இரஞ்சினி சிவசுப்பிரமணியம், சென்றல் நேர்சிங் ஹோம், 350, பலாலி வீதி, திருநெல்வேலி.

இரண்டாம் பரிசு:- திரு. அ. சுவாமிநாதன், பிரதான வீதி, பண்டத்தரிப்பு

மூன்றாம் பரிசு:- திரு. வ. மயில்வாகனம், அராலி வடக்கு வட்டுக்கோட்டை.

* பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான
# மனித உரிமை மீறல் பிரேரணை
## அரங்கேறி உருமாறிய விதம்!

இராணுவ ஆட்சியின் கீழ் ஆர்ஜன்ரீனாவில் மனித உரிமை மீறல்கள் பரந்த அளவில் இடம் பெற்றன.

அதனால் பாதிக்கப்பட்டவர்களில் முக்கியமானவர் திரு லியான்ரோ டெஸ்போ.

பின்னர் தலைமறைவாகி பிரான்ஸுக்கு ஓடி வந்தார்.

பிரான்ஸில் எட்டு ஆண்டுகள் அஞ்ஞாதவாசம் மேற்கொண்டார்.

அக்காலத்தில் இராணுவ ஆட்சியின் கீழ் ஆர்ஜென்டீனாவில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு எதிராக இயக்கம் ஒன்றை நடத்தினார்.

இந்த அஞ்ஞாதவாச காலத்தில் ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு முன் தோன்றி ஆர்ஜென்ரீனாவின் இராணுவ ஆட்சியில் இடம் பெற்று வந்த மனித உரிமை மீறல்களைப் பகிரங்கப்படுத்தினார்.

இது மனித உரிமை பேணல் வட்டாரங்களில் அவருக்கு நல்ல மதிப்பை ஏற்படுத்தியது.

இதன் காரணமாக ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவில் நிபுணத்துவ உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

ஆர்ஜென்ரீனாவில் இராணுவ ஆட்சி நீக்கப்பட்டு, மக்கள் அரசு பதவிக்கு வந்தது.

சிவில் ஜனாதிபதி அல்போன்ஸின் தனது நாட்டின் ஆதரவாக இவரை, மனித உரிமை ஆணைக் குழுவுக்கு நியமித்தார்.

மனித உரிமைகள் பேணப்படுதல் வேண்டும் என்பதற்காகத் தன்னையே அர்ப்பணித்தவர் தான் லியான்ரோ டெஸ்போ.

கடந்த மாதம் ஜெனிவாவில் நடந்த ஐ. நா. மனித உரிமை ஆணைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆர்ஜென்ரீனா குழுவின் தலைவராக அவரே கலந்து கொண்டார்.

### இலங்கை பற்றிய பிரேரணை

இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆணைக் குழுவின் முன் அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசு தூதுக்குழுப் பிரதிநிதிகள், சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

கடைசி நாள் மார்ச் 5 ஆம் திகதி இலங்கை பற்றிய பிரேரணை எதுவும் குழுமுன்னர் தாக்கல் செய்யப்படவில்லை.

> கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ. நா. மனித உரிமை ஆணைக் குழுவின் கூட்டத்தில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி விரிவாக ஆராயப்பட்டது.
> பின்னர் ஆர்ஜென்ரீனா கொண்டு வந்த பிரேரணை திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.
> இதன் பின்னணியில் இடம் பெற்ற சுவையான தகவல்கள் இக் கட்டுரையில் இடம் பெறுகின்றன.

பிரேரணை எதுவும் தாக்கல் செய்யப்படுவதானால் அன்று மாலை 6 மணிக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

6 மணிக்கு இன்னும் ஆக மூன்றே மூன்று நிமிடங்கள் இருந்தன.

ஆர்ஜென்ரீனா குழுத் தலைவர் லியோனிரோ டெஸ்போ தனது கையெழுத்துடனான பிரேரணையை, குழுவில் தாக்கல் செய்தார்.

பிரேரணையின் இலக்கம் எல் 74 ஆகும்.

ஆணைக் குழுவின் நிகழ்ச்சி நிரலில் இலங்கையைக் கண்டிக்கும் பிரேரணை சேர்க்கப்பட்டது.

தொகுப்பு:
எஸ். ஜி.

இலங்கை அரசுக் குழுவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இலங்கைக் குழுப்பிரதிநிதி ஒருவர்;

''ஆணைக்குழுவிசாரணை நடத்தும் இந்த மண்டபத்திலும் இரத்தம் ஓடும்''—

ஆசியப் பிரதிநிதி

### சில உள் விவரங்கள்

ஒருவர்;- 'தமிழ் நாட்டில் ஓடும் இரத்த ஆறு உங்களுக்குத் திருப்தி கொடுக்கவில்லையா?'— முறையான நகல் பிரேரணை தாக்கல் செய்யப்பட முன்னர் பூர்வாங்க நகல் ஒன்று சில தெரிவு செய்யப்பட்ட அரசுக் குழுப்பிரதிநிதிகள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

'இன்ரநாஷனல் அலேட் நிறுவனத்தின் செயலாளர் நாயகம் மார்டின் என்னல் அதன் பிரதி ஒன்றை இலங்கை அரசுக் குழுத் தலைவர் டாக்டர் எச். டபிள்யு ஜெயவர்த்தனாவிடம் கையளித்தார்.

ஆனால் பிரேரணையில் காணப்படும் எதையும் ஏற்றுக்கொள்ள இலங்கை அரசுக்குழு தயாராகவில்லை. இந்த நிலையில் விவாதம் நடந்தது.

மார்ச் 11 அணிசேரா இயக்க நாடுகளின் மனித உரிமைக்குழு கூடியது. ஆர்ஜென்ரீனாவும் இலங்கையும் அணிசேரா இயக்கத்தின் உறுப்பினர்கள். ஆகவே பிரேரணை குறித்து சமரசம் காணக்கூடாதா என்று குழுத் தலைவர் வினவினார். இதைத் தொடர்ந்தே இலங்கை படிப்படியாகத் தொடங்கியது.

ஆர்ஜென்ரீனா பிரேரணைக்கு குறைந்தது 12 நாடுகள் ஆதரவளிக்கும் என்பது இலங்கைக்குத் தெரிந்துவிட்டது.

இந்த நிலையில் ஆர்ஜென்ரீனா பிரேரணைக்கு நோர்வே, கனடா ஆகிய நாடுகள் ஆதரவளிக்க முன்வந்தன.

பேச்சுக்களின் முடிவில் திருத்தப் பிரேரணை ஒன்று மார்ச் 11 ஆம் திகதி காலை 11 மணியளவில் சமர்ப்பிக்கப்பட்டது.

மார்ச் 12ஆம் திகதி மனித உரிமை ஆணைக் குழு கூடியது. குழுவின் ஏனைய சகல நடவடிக்கைகளும் முடிவடைந்து விட்டன. இலங்கை பற்றிய பிரேரணை மட்டும் தான் விவாதிக்கப்பட இருந்தது.

திருத்தப்பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றுவதில் செனகல் நாட்டுப்பிரதிநிதி ஈடுபட்டிருந்தார்.

ஆணைக்குழு அன்று மாலை 4 மணிக்கு மீண்டும் கூடியது. அப்போதும் உடன்பாடு ஏற்படவில்லை. பின்னர் 6 மணி வரை ஒத்திவைக்கப்பட்

(8ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய ஆளும் அணியில்
## நேர்மைக்கு பலிக்கடாவான சிங்

ஊழல், மோசடிகளைக் கண்டு குமுறுவதும் அவற்றைக் களைய நடவடிக்கை மேற்கொள்வதும் சனநாயக பாரம்பரியம் ஆகும்.

காந்தியபாரம்பரியமும் சனநாயக பாரம்பரியமும் இரண்டறக் கலந்த இந்திய நாட்டில் ஊழல்களைய நடவடிக்கை மேற்கொண்ட ஓர் அமைச்சருக்கு எத்தனை நெருக்கடிகள், சோதனைகள் அவற்றின் விளைவாக அவர் பதவிமாற்றம் பெற்றார் கடைசியில் கனவான் தன்மையோடு ராஜினாமாவும்செய்தார்.

விசுவநாத் பிரதாப் சிங் ஒரு பலிக்கடா ஆகியுள்ளார். இந்திய துணைக்கண்டத்தின் பொருளாதாரத்தைச் சுரண்டி வாழ்ந்த கோடீஸ்வரத் திமிங்கிலங்களின் சதி இது. இதற்கு ராஜீவ் காந்தி துணை போயிருக்கிறார்.

வி. பி. சிங் நிதி அமைச்சராக இருந்த காலத்தில் நாட்டின் வருமானவரிச் சட்டத்தை மாற்றி அமைத்தார். வருமானத்தை அதிகரித்தார். ஊழலுக்குப் பேர் போன பல சிரேஷ்ட அதிகாரிகளைத் தண்டித்து வசதிகளைத் தாழ்மைப்படுத்தினார்.

வருமானவரியைச் செலுத்தாது தப்பித்தோடும் பல பெருச் சாளிகளைச் சட்டத்தின் முன்னர் கொண்டு வந்து நிறுத்தினார். பேர்லாக், அம்பானீஸ், டாட்டாஸ், மோடிஸ் என்று பல கோடீஸ்வர வர்த்தக நிறுவனங்களை அவருடைய அமைச்சு அதிகாரிகள் முற்றுகையிட்டனர்.

அவ்வது விசாரணை செய்தனர். இதனால் வருமானத்தை அதிகரித்தவர் இவர்.

நிதித்துறைச் சட்டங்களை மீறும் நிறுவனங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அவர்களுக்கு வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகளை மறுப்பதென்றும், வங்கிக் கடன் வசதிகளை அளிப்பதில்லை என்றும் தீர்மானம் எடுத்தார். இந்த நடவடிக்கைகளால் முறைகேடான உழைப்பில்

### சுழலும் உலகில் செய்திக்குப் பின்னால்...

ஈடுபட்டுப் பெரும் லாபத்தை ஈட்டிய செல்வந்தர்கள் கொதித்து எழுந்தனர்.

பாதுகாப்பு அமைச்சர்

இந்தப் பின்னணியில் ஜனவரி 23 ஆம் திகதி ராஜீவ் காந்தி சிங்கைத் தனது ரேஸ்கோர்ஸ் வீதி வாசஸ்தலத்துக்கு அழைத்து— 'முழுநேரக் கடமை செய்யும் திறமையான பாதுகாப்பு அமைச்சர் இந்தியாவின் தேவை'— என்று கூறினார். மறுநாள் அவரைப் பாதுகாப்பு அமைச்சர் பதவியைப் பொறுப்பு எடுக்கச் சொன்னார். கட்சித் தலைமைக்கு விசுவாசம் மிக்க சிங் அதனை ஏற்றுக் கொண்டார்.

### ஆயுதக் கொள்வனவு ஊழல்

பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்ற பின்னர் ஆயுதக் கொள்வனவு ஒன்றில் இரண்டு கோடி 40 லட்சம் டொலர் ஊழல் இடம் பெற்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக நேர்மைக்குப் பெயரெடுத்த திரு. சிங் விசாரணை செய்ய உத்தரவிட்டார்.

இவ்வாண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி இந்திய அரசுக்கு ஆதாரம் ஒன்றிடம் இருந்து ஓர் இரகசியத் தந்தி கிடைத்தது.

தரகர் ஒருவர் ஆயுதக் கொள்வனவில் ஏழு வீதம் கமிஷன் பெறும் ஏற்பாடு பற்றி இத்தந்தியில் கூறப்பட்டு இருந்தது. தரகர் பற்றிய பெயர் விபரங்களோ, பணத்தொகை பற்றிய தகவலோ இத்தந்தியில் காணப்படவில்லை.

ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி இத்தகவல் பற்றியும், அதுபற்றி விசாரணை நடாத்த ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டமை பற்றியும் பாதுகாப்பு அமைச்சரான வி. பி. சிங் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்திருந்தார். இதன் பிரதி ஒன்று பிரதமர் ராஜீவ் காந்தியின் கவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பிரதமர் அதனைப் பார்வையிட முன்னர் மறுநாட்காலை பத்திரிகைகளில் இது வெளியாகிவிட்டது. இதனைத் தொடர்ந்தும், நிதியமைச்சராக சிங் இருந்தபோது ஆற்றிய கருமங்களின் காரணமாகவும் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையின் விளைவாகவும் சிங் தனது பாதுகாப்பு அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

இரண்டே இரண்டு வரிகளில் இராஜினாமாக் கடிதத்தைப் பிரதமருக்கு அனுப்பினார் நாடாளுமன்றத்தில் இதுபற்றி அறிக்கை விடுக்க மறுத்தும், தனது கடிதத்தின்

வி. வி. எஸ்

பிரதியை பத்திரிகைகளுக்கு அனுப்ப மறுத்தும் கட்சி மீது தனக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒன்றில் இவரது இராஜினாமாப் பிரச்சினை விசுவரூபம் எடுத்தது.

எதிர்க்கட்சியினர் இவரது நடவடிக்கைகளைப் பாராட்டினார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் இவரைக் கண்டித்துப்பேசினார்கள்.

இதனை ஒரு கட்டத்தில் இதுவரை சாவதானமாக நடந்து கொண்ட பிரதமர் ராஜீவ் மேசையில் தட்டி ஆரவாரித்தார்.

இதிலிருந்து சிங் மேற்கொண்ட ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குச் சில காலமாகப் பின்னணியில் இயங்கிய சக்திகளுக்கு எப்படி ராஜீவ் துணை போனார் என்பது தெளிவாகிறது. *

### பூனைகளுக்கு வருமானவரி

சிக்காக்கோவைச் சேர்ந்த ஒரு பெண் தனது ஒரு லட்ச ரூபாய் சொத்தைத் தான் வளர்த்த 5 பூனைகளின் பெயருக்கு எழுதிவைத்து விட்டு இறந்துவிட்டார்.

வருமான வரி இலாகாவினர், 1700 ரூபா வருமான வரி கட்ட வேண்டும் என்று இந்த பூனைகளுக்கு பத்திரம் அனுப்பியுள்ளனர்.

## நீத்தார் புகழாரம்

# நல்லிசைப் பாடல்கள் தமிழிலும் உண்டெனக் கானமழை பொழிந்தவர்

இசைப்புலவர், இசைமாமணி, கானவாருதி, இசையரசு என்றும் இன்னும் பலபட்டப்பெயர்கள் அவரது பெயரோடு தொடருகின்றன.

இசையோடு இரண்டறக்கலந்து, இசையுலகெலாம் பரவி, மக்கள் செவிவழிப்புகுந்து, அவர் தம் நெஞ்சங்களில் பதிந்துவிட்ட பட்டப் பெயர்கள் இவை.

இவற்றை மகுடமாகத் தாங்கி அவற்றுக்குப் பெருமையளித்து வந்த பெரியார் திரு. என். ஷண்முகரத்தினமவர்கள்.

இன்று அவர் நம் மிடையே இல்லை.

மலைபோன்ற எடுப்பான -மாசுமறுவற்ற அந்தப் பொன் உடலம், நெஞ்சின் உரம், நேர்மை கொண்ட பார்வை, ஆகியவை, எவரையும் பணிய வைத்தன. பரந்து பொலிந்த அந்த வதனத்தில் இடையறாது தோன்றும் புன்முறுவல், நெற்றியில் துலங்கும் ஐவ்வாதுப் பொட்டழகு, மார்பினை அலங்கரிக்கும் ஜரிகை உத்தரியம் ஆகிய கலையலங்காரங்கள் மறக்கத்தான் உரியனவா?

மேடைகளிலே பக்கவாத்தியக்கலைஞர்கள் பலர் பக்தியுடன் அவரைச் சூழ்ந்திருக்க, தம் புராக்கருவி பின்னிருந்து ஸ்ருதி பிடிக்க, முன்னணிக்கலைஞர்கள் முன்னிருந்து வாசிக்க, இவை எல்லாம் ஒருங்குசேரப் பொதுமக்கள் பார்த்து மெய்மறந்திருக்க தேவகானம்போல இசை வெள்ளம் பாய்ந்தோடிய பல நிகழ்ச்சிகளை நல்ல நெஞ்சங்கள் இலேசாக மறந்திருக்கமுடியாது.

இவை ஈழத்திருநாடாம் நம்நாட்டில் மட்டுமல்ல. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற அயல் நாடுகளிலும் பலவாக நிகழ்ந்திருக்கின்றன.

தெலுங்கிலேதான் பாட்டுண்டு, தமிழிலே என்னதான் இருக்கிறது என்று' பேசி வரம்புக் கௌரவத்தைச் சம்பாதிக்க நினைக்கின்ற ஏகத்தினர் மத்தியிலே 'தெற் தமிழிலேயும் நல்லிசைப் பாடல்கள் பலவுண்டு'' என்று காட்ட தாம் தோன்றும் மேடைகளிலெல்லாம் பல சாகித்திய கர்த்தாக்களின் பாடல்களையும். தேவார திருவாசகம், திருப்புகழ் போன்ற தெய்வீகப் பாடல்கள் பலவற்றையும்பாடித் தாமும் பர



வசமடைந்து, இரசிகர்கள் பலரையும் மெய்மறக்கச் செய்யவல்ல அவரது பேராற்றலை வியக்காதிருக்க முடியுமா? நம் அமரர் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்.

பெரும் பெருங்கலைஞர்க்கே வாய்ப்பளிக்கும் தென்னிந்திய வானொலி நிலையங்களில் முழுநேரக் கச்சேரிகளில் அமரர் பங்கேற்கும் வேளைகளில் 'யாழ்ப்பாணம் என். ஷண்முகரத்தினம் அவர்கள் இப்போது பாடுவார்' என அறிவிப்பாளர்கள் அறிவித்தரும் போது எம் நெஞ்சமெல்லாம் பெருமையில் பூரித்ததையும் கச்சேரிகள்

ஏ. நமசிவாயம்

கேட்டு மகிழ்ந்ததையும் மறக்கத்தான் முடியுமா? இன்று நினைத்தாலும் இன்பந்தரும் நிகழ்ச்சிகளே.

எவ்வளவுதான் அவர் பெருமையை எண்ணிக்கொண்டே இருந்தாலும் அவரில்லா வெறுமையும் கூடவேதான் தெரிகிறது. அவர் மறைவு ஏக்கத்தைத்தான் தருகிறது.

முடிசார்ந்த மன்னர் மன்னவரும் ஈற்றிலொரு நாளில் பிடிசாம்பராவர் இந்த மண் மேலேதான் மடிவர் என்ற நியதியை இன்றுவரை எவருமே மீறியதில்லை அந்தவகையில் எண்ணி ஆறுதல் அடைய முயற்சிப்போம். அவரது அழிவேயில்லாத புகழினைப் போற்றி வாழ்வோம். வேறு வழியே இல்லை. *

> இசைப்புலவர் சண்முகரத்தினத்திறையடி எய்திய 31 ஆம் நாள் இம்மாதம் 28 ஆம் திகதியாகும். அதனையொட்டி இப்புகழாரம் இங்கு பிரசுரமாகிறது.

# வெற்றி தோல்வி இன்றி முடிந்த
# இல. - நியூசி. கிரிக்கெட் போட்டி

## விளையாட்டுத் துறை

நியூசிலாந்து அணி இலங்கைக்கு எதிராக மூன்று டெஸ்ட் போட்டிகளிலும், நான்கு ஒரு நாள் ஆட்டங்களிலும் ஆடுவதற்காக ஏப்ரல் மாத முதல் வாரத்தில் இலங்கை வந்தது.

இந்த அணி இலங்கைக்கு எதிராக ஆடிய முதலாவது டெஸ்ட் போட்டி இம் மாதம் 16ம் திகதி கொழும்பு கிரிக்கெட் கழக மைதானத்தில் நடைபெற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இது இலங்கை அணி கலந்து கொண்ட 25 வது டெஸ்ட் போட்டியாகும். இலங்கை கோஷ்டி இந்தியாவில் தனக்கு அடுத்தடுத்து கிடைத்த தோல்வி காரணமாகவோ, அல்லது கொழும்பு வாழ் கிரிக்கெட் ஆலோசகர்களின் ஆலோசனை காரணமாகவோ என்னவோ தெரியவில்லை ஆட்சத்தை வெல்வதிலும் பார்க்க ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவதையே சுருத்தாகக் கொண்டு மிகவும் பாதுகாப்பாக ஆடித் தனது எண்ணத்தை நிறைவேற்றுவதில் வெற்றியும் கண்டது.

பூனா தலைமையில் போடு வதில் ஜெயித்த நியூசிலாந்து அணித்தலைவர் ஜெவ் குரோ இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாடப்பணித்தார்.

இலங்கை அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களான ரோஷான் மகாநாமவும் பிரான்டன் குருப்புவும் ஆடக் களம் புகுந்தார்கள். இலங்கை டெஸ்ட் போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்பட்டதில் இருந்து இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பெடுத்தாட்ட வீரராக இருந்த சித்தாத் வெற்றிமுனி தனக்கு இந்தியாவில் கிடைத்த சில கசப்பான அனுபவங்கள் காரணமாகத் தனது கிரிக்கெட் வாழ்வில் இருந்து ஓய்வு பெற்றதால் அவரின் இடம் பிரான்டன் குருப்புவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

முதலில் ஆட்டமிழந்த மகாநாம பெற்ற ஓட்டங்கள் 16 இவரைத் தொடர்ந்து வந்த அசந்த குருசிங்க 22 ஓட்டங்களையும் ரோய் டயஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர். அர்ஜுன ரணதுங்கா அணித்தலைவர் டூலிப் மெண்டிஸ் ஆகியோரும் அவ்வளவாகச் சோபிக்காமல் ஆட்டமிழந்த போது இலங்கை அணி ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுகளை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆறாவது விக்கெட் ஜோடியாக குருப்புவுடன் இணைந்த ரஞ்சன் மடுகல்லே மிகவும் சிறப்பாக ஆடினார். ஒரு காலத்தில் இலங்கை அணிக்குத் தலைமை தாங்கக்கூடியவர் எனக் கருதப்பட்டுப் பின்னர் இலங்கை கிரிக்கெட் குழுவில் தனது இடத்தையே இழந்த ரஞ்சன் மடுகல்லே தன்னுடைய திறமையை இப்போட்டியில் பெற்ற 60 ஓட்டங்கள் மூலம் உறுதி செய்தார். தொடர்ந்து மூன்றாவது நாள் தேனீர் இடைவேளை வரை ஆடிய இலங்கை அணி ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 397 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இலங்கை அணி தனது முதலாவது இனிங்சை நிறைவு செய்யும்போது இலங்கையின் புதிய ஆரம்ப துடுப்பாட்ட வீரரான பிரான்டன் குருப்பு ஆட்டமிழக்காமல் 201 ஓட்டங்களைப் பெற்றுப் பல சாதனைகளுக்கு உரித்துடையவர் ஆனார். இவர் தனக்கு டெஸ்ட் ஆட்டத்தில் ஆட வழி சமைத்த சித்தாத் வெற்றிமுனியால் பெறப்பட்ட 190 ஓட்டங்களிலும் பார்க்க 11 ஓட்டங்கள் அதிகமாகப் பெற்றுள்ளார்.

தாங்கள் ஆடிய முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே இரட்டை சதம் பெற்றவர் வரிசை

ஈசன்

யில் மூன்றாவதாகவும் சதம் பெற்றவர் வரிசையில் 52 வது ஆகவும் குறிப்பு இடம் பெறுகிறார்.

இவருக்கு முன் இவ்வாறு இரட்டை சதம் பெற்றவர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்த பொஸ்டரும், மேற்கிந்திய ரோவும் ஆவார்கள். பிரான்டன் குருப்பு பெற்ற இரட்டை சதமே மிகவும் அதிக நேரத்தில் பெறப்பட்டது.

நியூசிலாந்து அணியில் சகலகலாவல்லவரான றிசாட் ஹாட்லி நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இந்த விக்கெட்டுகளுடன் இவர் இதுவரை வீழ்த்திய டெஸ்ட் விக்கெட்டுகளின் எண்ணிக்கை 355. இங்கிலாந்து வீரரான இயன் பொதமின் சாதனையை முறியடிக்க இவருக்கு இன்னும் 13 விக்கெட்டுகள் தேவை.

இவர் இந்த சாதனையை இலங்கை மண்ணிலேயே முறியடிக்க எமது வீரர்கள் உதவுவார்களா? என்று அடுத்துவரும் டெஸ்ட் போட்டிகளில் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பின்பு ஆட ஆரம்பித்த நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் துரிதமாக விக்கட்டுகளைப் பறிகொடுத்த போதும் அணித் தலைவர் ஜெவ் குரோவினதும் றிச்சாட் ஹட்லியினதும் அபார ஆட்டத்தினால் ... திருத்தப்பட்டபோது நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 405 ஓட்டங்களைப் பெற்றது.

டெஸ்ட் போட்டிகளில் ஆடும் நாடுகள் எல்லாம் ஆட்டத்தை தாம் வெல்லாவிட்டாலும் பரவாயில்லை. தோற்கக்கூடாது என்ற மனப்பான்மையில் ஆடு மாறுவதால் டல்லாயிரக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்புகள் அர்த்தமற்றவை ஆகிவிடும். *

## மூலவளங்---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

படும் காபனீரொட்சைட்டைப் பயன்படுத்தி உயிர்வாயுவைக் கொண்டு நாம் நாளாந்த சமையல் கடமைகளை மேற்கொள்ளலாம்

இலகுவான முறையில் உமி, சிரட்டைக்கரி பெறுவோர் இதனை சுலபமாகச் செய்யமுடியும்.

இதற்கான கருவிகளுடன் செய்முறை விளக்கங்களும் அங்கு அளிக்கப்படுகின்றன.

### சூரிய சக்தியின் பயன்பாடு

பொதுவாக சூரிய சக்தியை மின்சக்தியாக மாற்றி தேவைகளுக்குப் பயன்படுத்தும் முறை செலவு கூடியதாகும்.

இங்கு சூரிய சக்தியை தெறிப்புக் கருவிகள் மூலம் சேகரித்து குவித்து நேரடியாகப் பயன்படுத்தும் முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது

இக் கருவி மூலம் சமைத்தல், குளிரூட்டல், உலர்த்துதல், நீரைக் காய்ச்சி வடித்தல், உடைகளை அழுத்துதல் ஆகியவற்றுக்குச் சூரிய சக்தியைப் பயன்படுத்தும் சாதனங்கள் உருவமைக்கப்பட்டுள்ளன.

ஈழவளநாட்டில் வருடத்தில் அதிகமான நாட்களில் இலகுவாகக் கிடைக்கக்கூடிய சக்தியாக இருக்கும் சூரிய சக்தியைத் தகுந்த முறையில் பயன்படுத்தி அதன் மூலம் ஓரளவு வெற்றி கண்டுள்ளனர் ஆய்வு நிறுவனத்தினர்.

ஆய்வு நிறுவனம் என்ன சொல்கிறது. இந்த ஆய்வுகள் பற்றி ஆய்வு நிறுவனத்தினர் வெளியிடும் அபிப்பிராயங்களைப் பார்ப்போம்

ஈழவளநாட்டின் மூலவளங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்தும் ஆழமான ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது

இதன் மூலம் தேவைகளுக்கேற்பச் சூழல் பாதிப்புறு வண்ணம் சிறந்த செயல்திட்டங்கள் ஊடாக உள்ளூர் உற்பத்தியில் ஈடுபடுவது அவசியமாகிறது

உற்பத்தித் துறையில் வளர்த்தெடுப்பதற்கான இவ்வகையான ஆய்வுகள் இன்றைய காலகட்டத்தில் ஈழவர் பொருளாதார மேம்பாட்டிற்கான வழிகளைக் காட்டும். துரதிஷ்டவசமாக இவ்வகையான முயற்சி எம்மவர் மத்தியில் மிக அரிதாகவே காணப்படுகிறது மிக அத்தியாவசியமான தொழில்துறை வளர்ச்சிக்கான ஆய்வுகளை நடாத்தி தகுந்த தொழில் நுட்பத்தினூடாக ஆய்வுகளை வெளிப்படுத்தும் முயற்சியில் நாம் இறங்கியுள்ளோம்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது சிதைக்கப்பட்ட பல நாடுகள் இடமான பொருளாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெற்றியீட்டிக் கண்டு நிமிர்ந்து நடைபோடுவதை நாம் மறந்துவிடக் கூடாது.

எமக்கான பொருளாதாரத்தை நாம் திட்டமிட்டு நடைமுறைப் படுத்துவதன் மூலம் எதிர்காலத்தை வளமாக்க முடியும்.

### ஆய்வு நிறுவனம் வேண்டுவது

விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு போன்ற துறைகளின் அபிவிருத்திக்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு நாம் ஓரளவு வெற்றி கண்டுள்ளோம்.

நாம் மேற்கொண்டுள்ள எமது முயற்சிகள் பற்றித் தகுந்த ஆலோசனையும் ஒத்துழைப்பும் ஆகியவற்றை அறிவாற்றல் படைத்தவர்களிடம் இருந்தும் வசதி படைத்தவர்களிடம் இருந்தும் எதிர்பார்க்கிறோம்.

ஆய்வு நிறுவனத்தில் ஆராய்ச்சிகள் பற்றி பேராசிரியர் திரு ஏ. துரைராசாவிடம் கேட்டபொழுது எமது மக்கள் எப்பொழுதும் வேறு ஒரு நாட்டின் கையையே நம்பி இருப்பவர்கள். வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்று விழுந்தடித்து ஓடுகிறார்கள். இவை எல்லாம் வீணான செயல்கள்.

இப்படி அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆய்வு நிறுவனத்தினரின் ஆற்றும் சேவைகள் பாராட்டப்பட வேண்டியவை, ஊக்குவிக்க வேண்டியவை. *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடையைப் பேணுதல் அவசியம்"
இன்று எந்த உடையும் அதிகவிலை. எனவே உடையை மெதுவாகச் சலவைசெய்து, நீண்டகாலம் பாவிக்க வேண்டும்
"நுரைவளம் உள்ள மில்க்வைற் நீல சோப்பை வாங்கி உபயோகியுங்கள்"
* மேலுறைகளைச் சேகரித்தனுப்பி பலன்தரு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

25 - 04 - 1987 சனிக்கிழமை

ஏழைகளுக்குத் தன்னலமற்ற தொண்டு செய்வதைக் காட்டிலும் அதிக தூய்மையான இறைவனுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கக் கூடிய வழிபாடு வேறு எதுவும் இல்லை.
-- மகாத்மாகாந்தி அடிகள்
500 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளைக் கொடுத்து (1) அழகிய மகாத்மா காந்தி சிலையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.



யாழ். குடாநாட்டின் குடிமனைகள் மீது மூன்றாவது நாளாக நேற்றுக்காலை பொம்மர்கள் நடத்திய தாக்குதலில் தகர்ந்து தரைமட்டமாகிச் சேதமடைந்த வீடுகளைப் படத்தில் காணலாம். இவை யாழ் நகர் மார்ட்டின் வீதியிலும், ஐந்தாம் குறுக்குத் தெருவிலும் இருந்த வீடுகள். நடுவில் அம்புக்குறி மூலம் காட்டப்பட்டிருக்கும் துவாரம் விமானக் குண்டு துளைத்த இடம். அந்தத் துவாரத்தினூடாகச் சென்ற குண்டு வீட்டை முழுக்க நாசமாக்கியது. (படம்: ஜெய த)

பிரதமர் பிரேமா அறிவிப்பு:

# முதலில் நாட்டைக் காப்போம்
# பின்பே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## இந்தியாவையும் சாடுகிறார்

கொழும்பு, ஏப். 25

நாட்டின் ஒருமைப்பாடு, ஜனநாயகம் காப்பாற்றப்பட்ட பின்னரே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவது குறித்து அரசு யோசிக்கும்.

-இப்படி பிரதமர் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அவசரகால சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதத்தை பிரதமர் பிரேமதாச முடித்துவைத்துப் பேசினார்.

அப்போது பிரதமர் சொன்னதாவது:-

அரசியல் தீர்வு ஒன்றைக்காண நாம் சண்டையிடவில்லை.

நாட்டைப் பாதுகாக்கவே நாம் போராடுகின்றோம்.

### இந்தியாவுக்கும் கூறுவேன்

மக்களின் உயிர்களுக்கு ஆபத்து இருக்கும்போது அரசியல் தீர்வு காணுவது சாத்தியமானதல்ல. தீர்வு காணத் தகுந்த சூழ்நிலை ஏற்படவேண்டும். இதை இந்தியா உட்பட எந்த ஒரு நாட்டுக்கும் கூறுவேன்.

அரசாங்க நாடாளுமன்றக் குழு இராணுவ நடவடிக்கையைத் தொடருமபடி கோரியுள்ளது யார் எப்படிக் கண்டித்தாலும் அத்தீர்மானத்தின்படி அரசாங்கம் செயற்படும்; பின் நிற்காது.

### நாட்டின் சத்திராதி

இன்றைய பிரச்சினைக்கு வேறு வழியில் பரிகாரம் காணவேண்டும் என்று யாராவது கூறினால் அவர் நாட்டின் சத்திராதி என்றே கணிக்கப்படுவார்.

தீவிரவாதிகளுக்குப் புகலிடம் அளிக்க வேண்டாம் என்று உலக நாடுகளை இலங்கை அரசு கோரும்.

இலங்கையில் அமைதி நிலவ உதவும்படி நட்புறவு நாடுகள் கோரப்படும்.

ஜனாதிபதியை ராஜினாமாச் செய்யக் கோருவது நாட்டை பயங்கரவாதத்தில் வீழ்த்தச் செய்யும் சதியாகும்.

வன்செயல் குறித்து இந்தியா தனது கவலையைத் தெரிவித்தால் மட்டும் போதாது. முன்னுக்கு வந்து செயல்ரீதியாகச் செயல்பட வேண்டும்.

### தேசிய வீரர்கள்

தீவிரவாதத்தில் உயிரிழந்தவர்கள் தேசிய வீரர்களாகக் கணிக்கப்படுவர்.

தமிழ் நாட்டில் குற்றம் புரிந்த தமிழ் தீவிரவாதிகள் மீது இந்தியா நடவடிக்கை எடுக்கிறது. இலங்கையில் குற்றங்களைப் புரியும்போது நடவடிக்கை எடுக்கவில்லை.

முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதிக்கும் விதத்தில் அரசியல் தீர்வு காணப்படமாட்டாது.

தமிழ் நாட்டில் உள்ள தமிழ்த் தீவிரவாதிகளை இந்தியா இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டும்.

-இப்படி பிரதமர் பிரேமதாச தெரிவித்தார். (உ-எ)

யாழ். மாநகர சபை ஊழியர்கள்

## உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஏப். 25

நேற்று நடைபெற்ற பொம்மர் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு யாழ் மாநகரசபை ஊழியர் நிவாரண நிதியில் இருந்து தலா ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இறந்தவர்களில் நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்ட இருவரின் குடும்பங்களுக்கும் தலா ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. மற்றையவர்களின் குடும்பங்களுக்கும் இப்பணம் வழங்கப்படும்.

-இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார். (உ-7)

## தர்மம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவதியுறுவான்

தர்மத்தை மீறுபவன் தலை பறிபோகும். எதிரிப்படைகளால் அது முடியாமற் போகிலும் இறைசக்தி அவ்வேலையைச் செய்யும். அதன் மத்தியில் அபூர்வம் உச்சமடையும் போது பகவான் எழுவான்.

## வல்வையில் ஷெல்

வல்வெட்டித்துறை, ஏப். 25

நேற்று அதிகாலை 2 மணியளவில் வல்வை இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. பெரும்பாலமையான ஷெல்கள் மண்டாரப்பகுதியில் விழுந்து வெடித்தன.

## நால்வர் காயம்

சாவகச்சேரி, ஏப்ரல் 25

சாவகச்சேரியில் விமானக் குண்டு வீச்சில் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

சுமார் பத்து மணியளவில் நவீன சந்தைப் பகுதியில் வட்டமிட்ட ஹெலி கட்டடத்தில் மீன் சந்தைப் பக்கமாக இருந்த நால்வர் காயமடைந்தனர்.

சந்தை தினமாகையால் அங்கு கூடியிருந்த மக்கள் பொருள்களையும் அப்படியே விட்டுவிட்டு ஒதுக்கிடம் தேடி பதற்றத்துடன் ஓடிச் சென்றனர். (உ-31)

## அரசின் விருப்பப்படி தீர்வுகாண ராஜீவ் அனுமதித்துவிட்டாராம்

கொழும்பு, ஏப். 25

இனப்பிரச்சினையை எப்படித் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று இலங்கை அரசு விரும்புகின்றதோ அப்படியே தீர்த்துக் கொள்ளட்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி கூறிவிட்டார்.

இத்தகவலைப் பொது நிர்வாகத்துறைப் பிரதி அமைச்சர் வேரிவி சமரவீர நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

இனப்பிரச்சினை பற்றி இப்போதுதான் பிரதமர் ராஜீவ்காந்தி முழுமையாகப் புரிந்துகொண்டிருக்கிறார் என்றும் பிரதி அமைச்சர் சமரவீர தெரிவித்தார். (உ-எ)

## இக்கமுனையில் ஷெல்

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 25

பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று இக்கமுனையில் உள்ள வை. ஆ. சர்மா என்ற ஆலய அர்ச்சகர் வீட்டு முற்றத்தில் விழுந்து வெடித்தது.

இதனால் அவரின் வீடு சேதம் அடைந்துள்ளது. (உ-எ-160)

## துண்டுப் பிரசுரமும் துப்பாக்கி வேட்டும்

யாழ்ப்பாணம், ஏப். 25

ஹெலிக்கொப்டரில் இருந்து துண்டுப்பிரசுரம் வீசப்பட்டதை அடுத்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமாலை ஆறரை மணியளவில் யாழ் நகரப் பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

"யாழ்ப்பாண வாசிகளே" என்ற தலைப்பில் 'யாழ்ப்பாணத் தமிழரொருவர்' என்னும் அடிக்குறிப்புடன் இத்துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது. இது புதிதல்ல. ஏற்கனவே ஹெலிமூலம் வீசப்பட்டது ஏப்ரல் 1ஆம் திகதி இடப்பட்டது. (உ-10)

## 35 சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

கொழும்பு, ஏப். 25

புறக்கோட்டை பஸ் நிலைய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் இன்னும் முப்பத்தைந்து பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை. பொரளை சவச்சாலையில் இச்சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன. (உ-ஏ)

## சங்கானையில் கூட்டம்

வட்டுக்கோட்டை, ஏப். 25

சங்கானையில் வெளியிடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு ஒன்றை நிறுவ முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதனை உருவாக்குவதற்கான விசேட கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சங்கானை பொதுநூலகத்தில் நடைபெறும். (உ-31)

## ஊர்காவலர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஏப். 25

கொழும்பு குண்டு வெடிப்புக் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட ஊர்காவல் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்புப் பகுதியில் இச் சம்பவம் நடைபெற்றது.

ஊர்காவல் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் சில மணி நேர மோதல் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. (இ-10)

## ஹிட்லர் செய்தது இதைவிட மேலானது!

### பாதிக்கப்பட்டவரின் மனவேதனை

யாழ்ப்பாணம், ஏப். 25

இப்படிச் செய்வதை விட சர்வாதிகாரி ஹிட்லர் செய்தது போல் எல்லோரையும் ஓர் அறையில் பூட்டிவைத்து விட்டு வெடிகுண்டு மூலம் கொல்லலாம். அது இதைவிட மேலானது

- இவ்வாறு பிறின்ஸ் ஜேசுதாசன் தெரிவித்தார்.

யாழ் நகரில் நேற்று நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் இவரது வீடு முற்றுமுழுதாக தரைமட்டமானது குறிப்பிடத்தக்கது. எனது மாமியார், வீட்டு வேலைக்காரி ஆகியோர் இந்தத் தாக்குதலில் இறந்து விட்டனர். எனது மனைவி கால் முறிந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் நான் மாற்றுடையின்றி நடு வீதியில் நிற்கிறேன்.

இதைவிட யாருக்காவது துன்பம் வருமா? - இப்படி அவர் வினவினார். (உ-7)

## நாடாளுமன்--

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

றான; கௌதமன் எம். பி ஆனந்த தஸநாயக்க அத்தனகல்ல எம். பி லக்ஷ்மன் ஜெயக்கொடி, மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மாரகம எம். பி தினேஷ் குணவர்த்தன ஆகியோரே வெளியேற்றப்பட்டனர்.

இவர்களைத் தொடர்ந்து ஸ்ரீ. ல. சு. க. வைச் சேர்ந்த மதவாச்சி எம். பி மைத்திரி பால சேனநாயக்கா, கம்பஹா எம். பி எஸ் டி பண்டாரநாயக்கா, கொழும்பு மத்தி மூன்றாவது எம்பி ஹலீம் இஷாக் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர். (உ-எ)

## நேற்றும்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தன.

பொம்மர் தாக்குதல் முடிவுற்ற வேளையில் நகரில் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் ஒன்று அடுத்தடுத்து இரண்டு ரொக்கட் மோட்டர்களை நகர்மீது ஏவியது. (உ-10-7)

## ஒத்திவைப்பு

சாவகச்சேரி, ஏப் 25

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நேற்றும் இன்றும் நடைபெறவிருந்த "பாலர் கல்வியிலே உபகரணப் பொருட் சாதனங்கள்" பொருட்காட்சி பின்போடப்பட்டுள்ளது (உ-31)

## இலங்கைக்கு...

(7ஆம் பக்க தொடர்ச்சி)

டது

ஆணைக்குழுக் கூட்ட மண்டபத்தில் ஐந்நூறு வரையானோர் குழுமி இருந்தனர். பத்திரிகையாளர்கள், அவதானிகள் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், அரசுக் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோரே அவர்கள்.

திருத்தப் பிரேரணைக்கு இலங்கையை உடன்பட வைக்கும் பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்தன. விரக்தியடைந்த பெல்ஜியம் பிரதிநிதி கூறினார்:

'இனப்பிரச்சினை குறித்து இலங்கை அரசாங்கம் தமிழருடன் நடத்தும் பேச்சுக்கள் எப்படியானவை என்பது இப்போதுதான் நமக்குத் தெரிகிறது'

இந்த 'பகிரங்கப்' பேச்சுக்கள், மண்டபத்தில் குழுமியிருந்தோர் முன்னிலையில் இரண்டு மணித்தியாலங்கள் வரையில் இடம்பெற்றன.

இலங்கை 'பிடிவாதம்' காட்டியதால் ஒரு கட்டத்தில் மூலப்பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்போவதாக ஆர்ஜென்ரீனா, கனடா, நோர்வே ஆகியன பயமுறுத்தின.

இறுதியாக ஆணைக்குழு மாலை 6 மணியளவில் கூடியது. செனகல் நாடு கொண்டுவந்த திருத்தங்களுடன் தனது பிரேரணையை ஆர்ஜென்ரீனா சமர்ப்பித்தது. இறுதியில் அப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர் இந்தியப் பிரதிநிதிகளும் இலங்கைப் பிரதிநிதிகளும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ஜென்ரீனா பிரேரணைக்கு போட்டியாக பாகிஸ்தானினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை, கேட்பாரற்றுப் போனது. அது, குழுவின் கவனத்துக்கே எடுக்கப்படவில்லை.

ஆர்ஜென்ரீனாவின் பிரேரணை திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டபோது இலங்கை அரசக்குழுவின் தலைவர் டாக்டர் எச். டபிள்யு. ஜெயவர்த்தனா, குழுக் கூட்ட மண்டபத்துக்கே வரவில்லை.

—ஆதாரம்:

தமிழ் டைம்ஸ்

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விபரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கைவங்கியின் 20-04-87ஆம் திகதிய மாற்று விகிதமாகும்).

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 46. 76 |
| அமெ. டாலர் | 28. 79 |
| இந்திய ரூபா | 2.17 |
| ஜேர்மன் மார்க் | 15. 84 |
| கனடா டாலர் | 21. 56 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 75 |
| பிராங் (சுவிஸ்) | 19. 04 |
| அவுஸ். டாலர் | 20. 25 |



கடந்த புதன்கிழமையன்று தென்புலோலியில் அரச படைகள் நடத்திய பொம்மர் தாக்குதலின் போது சேதமுற்ற வீடு ஒன்றின் படத்தையும், இத் தாக்குதலில் பலியான அம்பனையைச் சேர்ந்த கல்லூரி மாணவன் எஸ் ஜெயக்குமாரின் (20 வயது) சடலத்தையும் படத்தில் காணலாம்.
(படம்:- பருத்தித்துறைச் செய்தியாளர் பி- இரகுநாதன்)

நீத்தார் பட்டியல்

## ஞானமுத்து - சூசைப்பிள்ளை (முத்துராசா)

வோயிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பொலிகண்டியை வதிப்பிடமாகக் கொண்டவருமான ஞானமுத்து சூசைப்பிள்ளை (முத்துராசா) அவர்கள் 22 - 04 - 87 புதன் கிழமை காலமானார்.

அவரது மறைவுச் செய்தியை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்

பொலிகண்டி
25-4-87

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 25 - 04 - 1987
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org